RECEIVED 1980-11-19 PERIODICALS DIVISION LIBRARY


# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 கார்த்திகை 4 முஹர்றம் 10 இதழ் 280

ம்பாணம் புதன்கிழமை 19 - 11 - 80


## 'நாவலர் ஆராய்ச்சி' நூல் மலேசியாவில் வெளியாகும்

(சுழிபுரம்)

பண்டிதர் பொன் பாக்கியம் எழுதிய நாவலர் ஆராய்ச்சி நூல் இரண்டாவது பதிப்பாக அச்சிடப்பட்டு வெளியிடப் படவுள்ளது. பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவினர் இந்நூலை அச்சிட்டு வெளியிடும் வேலைகளை கவனித்து வருகின்றனர். இவ் இரண்டாவது பதிப்பு வெளியீட்டு விழா மலேசியாவில் அடுத்த மாதப் பிற்பகுதியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நூல் ஆசிரியர் பண்டிதர் பொன். பாக்கியம் வெளியீட்டு விழாவில் பங்கு கொள்ள மலேசியாவுக்கு செல்லவுள்ளார் எனத் தெரிகிறது. (ச)

# சுதந்திரம் எமது பிறப்புரிமை; எந்தத் தியாகத்துக்கும் தயார்!

## சபையில் 'வி. என்.'

### சங்கிலியமன்னனின் கடைசி ஆசைபற்றியும் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபம்

(நமது சபை நிருபர்)

"ஒரு இனம், விடுதலை பெறுவதற்கு எத்தனையோ வழிகள்--போராட்ட முறைகள் இருந்தாலும்; சாத்வீகமுறைதான் எமது அணுகுமுறை. சுதந்திரம் எமது பிறப்புரிமை. இதனை அடைவதற்காக எத்தன்மையான தியாகத்தையும் செய்யக்காத்திருக்கின்றோம்" என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினர்.

"தமிழ் ராஜ்யத்தை ஆண்ட சங்கிலிய மன்னன் தனது உயிர் பிரியும்போது தமது ராஜ்யம் மீளப்பெறவேண்டும் என்று அறைகூவல்விடுத்தான் என்று தெரிவித்த திரு. வி. என். நவரத்தினம்; "சங்கிலிய மன்னன் இறக்கும் தறுவாயில்; "எனது ரத்தம் சிந்திய இம்மண்ணில் உருவாகப்போகும் பல வீரர்கள் இப்பொழுது நான் இழந்துவிட்ட தமிழ ராஜ்யத்தை மீட்டெடுப்பார்கள் ......" என்று கூறித்தான் உயிர்துறந்தான். இழந்துவிட்ட எமது ராஜ்பத்தை மீளப்பெறுவதே எமது இலட்சியமுமாகும்" என்று கூறினர்.

பாராளுமன்றம் நேற்று மீண்டும் கூடிய போது, வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. இவ்விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேலும் கூறியதாவது:-

#### அரசியல் ஸ்திரம்

"1977-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாம். பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையை நிறைவேற்றுவதே எமது கடமையாகும். இந்த இலட்சியப் பயணத்தில் நாம் இம்மியளவும் விலகிச் செல்லப் போவதில்லை.

"தமிழர் பிரச்னைகளைத் தீர்த்துவிட்டதாக அரசு கூறுகிறது. ஆனல் உண்மையில், தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாட்டில் என்ன அபிவிருத்தியை மேற்கொண்டாலும், எல்லா அபிவிருத்திகளுக்கும் அரசியல் உறுதிப்பாடு அவசியம். அது இல்லையே!

#### இன விடுதலைக்கு...

"ஒரு இனம் விடுதலை பெற எத்தனையோ வழிமுறைகள் உண்டு. "அவசியம் தேவைப்பட்டால், தனது இன விடுதலைக்கு வன்முறையைக்கூடக் கைக் கொள்ளலாம்" என்று கூட்டுச்சேரா மகாநாட்டில் கூட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது ஆனல் எமது வழி; சாத்வீகமானது.

#### பதினைன்காம் நூற்றாண்டிலிருந்து

"பதினைன்காம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து படைகள் கிழக்கு நோக்கி வந்தன அப்போது இலங்கையில் மூன்று ராஜ்யங்கள் இருந்தன. அவை [illegible] தமிழ் ராஜ்யமாகும். தமிழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## "பாரிய திட்டங்களினுல் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது"

### பாராளுமன்றத்தில் செல்லத்தம்பு உரை

(கொழும்பு)

"மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பாரிய திட்டங்களின் மூலமே மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முடியுமென்ற அரசாங்கத்தின் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது".

மேற்கண்டவாறு முல்லைத்தீவு எம் பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினர்,

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது கிராமமட்டத்தில் மேற்கொள்ளப்படும் சிறிய அளவிலானதும். குறுகிய காலத்தில் நிறைவேற்றக் கூடியதுமான திட்டங்களின் மூலமே தற்போது நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முடியுமென்றூர். (ம)

## சபையில் ஒலித்தவை

எம். எச். முஹம்மது: லுசாக்காவில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற ஒன்றய மகாநாட்டில் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒரு கட்சி ஆட்சியை ஆதரித்துப் பேசினர்.

அமிர்: நான் அப்படி நினைக்கவில்லை

முஹம்மது: பல கட்சி ஆட்சியினுல்தான் என். எம், பெரேரா போன்றவர்களால் பிரதமராக முடியவில்லை என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.

அமிர்: அவர் அப்படிப் பேசியிருந்தால் அது அவரின் தனிப்பட்ட கருத்தாக இருக்க வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அது; ஒரு கட்சி ஆட்சியை எதிர்க்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முஹம்மது; இந்த நாட்டில் இருவேறு இனங்கள் வாழ்கின்றன என்ற எண்ணம் மறைய வேண்டும்.

யோகேஸ்: இங்கு, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேச்சுக்கு இடமில்லை. இங்கு இரு தேசிய இனங்கள் வாழ்கின்றன இது சரித்திரத்தால்; புவியியலால்; அரசியலால் நியப்பட்ட உண்மை.

முஹம்மது: ஒவ்வொருவர் உழைப்பும் இன்று அதிகரித்திருக்கிறது. தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க 25 சதம் கூலி பெற்றவர் இன்று இரண்டு ரூபா பெறுகிருர். கூடுதல் விலையில் பொருள்களும் விற்பனையாகின்றன.

யூ பி. விஜயக்கோன்: 1977-ம் ஆண்டில் யாழ். மக்கள் வீதியில் செல்லப் பயப்பட்டார்கள்; கொலை நடந்தாலும் சாட்சி சொல்லப் பயப்பட்டார்கள். ஆனல் இன்று நிலைமை மாறி மக்கள் அங்கு சுதந்திரமாகத்திரிகிருர்கள்.

(8-ம், பக்கம் பார்க்க)

## அச்சுவேலி ரூபா 75,000 கொள்ளை:

# 15 வயது இளைஞர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி தெற்கில் வீடு பூட்டப் பட்டிருந்த நிலையில் இடம் பெற்ற 75 ஆயிரம் ரூபா மர்மக திருட்டு துப்புத் துலக்கப்பட்டுள்ளது. திருடப் பட்ட நகைகள் மீட்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதுடன் 15 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தண்டனை வழங்குவது டிசப்பர் 1-ம் திகதிக்கு ஒத்திப்போடப் பட்டது.

கடந்த 30-ம் திகதி அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த நவரத்தினம் பத்மாவதி என்பவரது வீட்டில் கண்பார்வையற்ற அவரது சகோதரி மட்டும் இருந்த சமயம் ரூபா 75 ஆயிரம் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டிருந்தன. வீடுபூட்டியிருக்க வெகு சாதுரியமாக இத்திருட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

திருட்டுப்போன வீட்டுக்காரரின் இனத்தவரான எஸ் கருணாநிதி என்பவரையும் அவரது மகனை 15 வயதுடைய கிருஷ்ணகுமார் என்பவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை செய்த சமயம் மேற்படி திருட்டு துப்புத்துலங்கியது.

மேற்படி வாலிபர் திருடிய நகைகளில் ஒருபகுதியை திருடப்பட்ட வீட்டு வாசலில் கொண்டுபோய்ப் போட்டு விட்டதையடுத்து அவற்றைப் பொலிசார் கைப்பற்றியதுடன் ஒருபகுதியை அந்த இளைஞரிடமிருந்தும் வேறு ஒரு பகுதியை யாழ். நகரில் ஒருநகை வியாபாரியிடமிருந்தும் கைப்பற்றினர்.

பிரஸ்தாப தந்தையும் மகனும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் மகன் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதன் பேரில் அவரை 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் டிசம்பர் 1-ம் திகதிக்கு அவருக்கு தண்டனை வழங்குவதை ஒத்திவைத்தார். அத்துடன் தந்தையை விடுதலை செய்தார்.


ஹோம் பினன்ஸ் லிமிட்.

82, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.

வருடாந்தம் ஆகக்கூடுதலான

25% வட்டியை

வழங்குகின்றது

ரூபா 1000/-க்கு மேற்பட்ட எந்த முதலீட்டிற்கும் மாதாந்தம் வட்டி வழங்கப்படும்

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடு செய்யுங்கள்

தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறைவீதி முகப்புடன் நீர்வேலி சந்திக்கருகில் மின்சாரம், பஸ், பாடசாலை சகலவசதிகளுடன் 8பரப்புக்காணி, 40பரப்பு வயல் தனித்தனி விற்பனைக்குண்டு. செல்வரத்தினம், நீர்வேலிச்சந்தி. 7381

## காணவில்லை

ஊர்காவற்றுறை லெட்சுமி பவான் ஹோட்டலில் ரீமேக்கராய் இருந்த தி. இலக்கின குமார் (ராசன்) என்பவர் ஒரு கிழமையாய் காணாமல் போய் விட்டார். இவர் இருக்கும் இடத்தை ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அல்லது லெட்சுமி பவான் ஊர்காவற்றுறைக்கு தகவல் தந்தால் ரூபா 100 சன்மானம் வழங்கப்படும். 7384

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(பிரிவு 532)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமில்லாது மரணமெய்திய தொல்புரம் சின்னத்தம்பி பரமலிங்கம் என்பவரின் மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்

மரணச்சொத்து நியாயாதிக்கம் இல. ரி/62

எதிர்

பரமலிங்கம் கைம்பெண் வள்ளியம்மை, தொல்புரம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றூனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்.

1980-ம் ஆண்டு புரட்டாதி மாதம் ஆம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

7379

## சுன்னாகம் பட்டின சபை பகிரங்க ஏலவிற்பனை விளம்பரம்

1980-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந் திகதி காலை 9-00 மணி அளவில் சுன்னாகம் சந்தைக்குள் வைத்து பாவிக்கப்பட்ட பொருட்களான யன்னல், கதவுகள் நிலைகள், பனை மரங்கள், முள்ளுக்கம்பிகள், பாலை மரத் தீராந்திகள் முதலிய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்வியைக் கேட்கும் கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி பொருட்களை 3 நாட்களுள் அப்புறப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொ. பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
சுன்னாகம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம், சுன்னாகம்,
12-11-80. (7390)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் வசித்த காலஞ்சென்ற நாகமுத்து தம்பையா தம்பியப்பாவின் மரணசாதன சொத்துக்கள் சம்பந்தமாக,

மரணமெய்தியவர்

மரணசாதன தத்துவ வழக்கு இல. த/3561

சின்னத்தம்பி அம்பிகாபதி, கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை; ஏன் முற்றூனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
7388 பதிவாளர்.

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 4-ந் திகதி
புதன்கிழமை
(19-11-80)

மேடம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படும், நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும், கணவன் மனைவி உறவுமுறை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

இடபம்: வாழ்க்கை இன்று அமைதி குறைந்ததாக காணப்படும், சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு, இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிக்கலாம்.

மிதுனம்: அல்லைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிட்டும், எடுத்த முயற்சியைச் சிறப்பாகச் சாதிப்பீர்கள்.

கடகம்: இன்று வாழ்க்கை அமைதியாகச் செல்லும், எண்ணம்போல் யாவும் நடக்கும், உறவினர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அரசியலில் பிரகாசிக்க இடமுண்டு.

சிங்கம்: எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது, உதவி செய்யப்போய்க் குறைகேட்க நேரிடலாம், உடல்நலம் பேணி நடக்கவும்.

கன்னி: மனதிற்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறும், குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும், களஸ்திர வழியால் பெருமைகள் வந்து சேரும்.

துலாம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றலாம், உடல்நலனும் சிறிது பாதிக்கப்படலாம், நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடக்கூடும்.

விருச்சிகம்: புதிய இடத்திலிருந்து உங்களுக்கு ஆதரவு வளரும், எதிர்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள், பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

தனுசு: வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும், தொழில் துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், சிலர் வாழ்க்கையில் அரசினர் விருதுக்கும் இடமுண்டு.

மகரம்: பணவருவாயில் நல்ல திருப்பம் காணப்படும், விருந்தினர் வருகை மகிழ்ச்சியைத் தரும், சிலர் உல்லாசப் பயணம் ஒன்றுக்கும் திட்டமிடுவார்கள்.

கும்பம்: சிந்தனை புதிர் போடும், சீறிவரும் கோபம் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும், தொழில் துறையில் புதிய கவலைகள் தோன்றக்கூடும்.

மீனம்: ஆத்திரப்போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இளக்க நேரிடும், மேலதிகாரிகளிடம் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையுணர்ச்சியுடன் நடந்து கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கவனிப்பாரற்றநிலையில் நெசவு சாலை?

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலுள்ள நெசவுசாலைக்கட்டிடக் கூரை கிடுகு ஓலையினாலேயே இதுவரை காலமும் வேயப்பட்டு வந்தது. இவ்வருடம் புதிதாக வேயப்படாததால் நெசவுதறிகள், நூல்கள் மற்றும் உபகரணங்கள் மழையில் நனைந்து பயனற்றுப் போய்க்கொண்டிருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்க இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொழில் முன்னிலைப் பாடத்திற்கு முக்கியம் கொடுக்கும் இவ்வேளையில் இதுவரை காலமும் செவ்வனே இயங்கிவந்த இந்நெசவு நிலையத்தை பாழடையச் செய்வதையிட்டு, மாணவர்களும் பெற்றோரும் கவலையடைந்துள்ளனராம். (ஈ)

## பதிலதிபர்கள் பற்றியவிபரம் யாழ். கல்விப்பகுதி சேகரிக்கிறது

(நெல்லியடி)

யாழ். கல்வி மாவட்டத்தில் பதில் அதிபர்களாகப் பணி புரிந்தார்கள், புரிபவர்கள்பற்றிய விபரங்களை யாழ். கல்வித்திணைக்களம் சேகரித்து வருகின்றது.

ஒவ்வொரு வட்டாரக் கல்வியதிகாரிகளுக்கு ஊடாக பாடசாலை அதிபர்கள் இவ்விபரங்களைச்சேகரித்து வருகின்றார்கள். இவ்விபரங்கள் இம்மாதம் 25ம் திகதிக்கு முன் வடமாநிலக் கல்வியதிகாரி திரு. கே. சிவநாதனிடம் கையளிக்கப்படும். இப்பதிலதிபர்களின் நிர்வாக முறை பாடசாலையிலும் வெளியிலும் செய்கின்ற சேவைகள் மாணவர் - பெற்றோர் - ஆசிரியர்களுடன் பழகும் முறை 5ம் வகுப்புப் பரீட்சை முடிவுகள் என்பன விபரத்தில் உள்ளடங்கியிருக்க வேண்டுமெனக் கல்வித்திணைக்களம் கோரியுள்ளது. (அ)

## ரூ.70 உயர்வு: சு. தொ. சங்கம் ஆராயும்

(யாழ்ப்பாணம்)

அரசின் 70 ரூபா சம்பள உயர்வு வரவு - செலவுத்திட்டத்தில் தொழிலாளர்களின் சேமலாபநிதி, 50 ரூபா கூலியைக் குறைத்து வழங்கும் முதலாளிமருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் போன்ற விஷயங்கள் பற்றி நாளை வியாழக்கிழமை கூடும் இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கப் பொதுச்சபை ஆராயவிருக்கிறது.

தாவடியிலுள்ள சங்கப்பணிமனையில் அதன் தலைவர் திரு. மா. க. முதலியார் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

பகிரங்கக் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு மாலை நடைபெறும். (அ)

## கட்டாக்காலி மாடுகளின் அட்டகாசம்

(துணுக்காய்)

துணுக்காய் - வவனிக்குளம் பாண்டியன்குளம், யோகபுரம், மல்லாவி முதலான பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் அட்டகாசத்தால் இப்பகுதி மக்களின் விவசாயமுயற்சிகளுக்குப் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

நெல், பயறு, உழுந்து போன்ற பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தாம் வேலிகளை ஒழுக்காகப் பாதுகாத்தும் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கின்றனர். விவசாயிகள் இரவு பகலாகத் தமது பயிர்களைப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளார். துணுக்காய், பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர்கள் இதுபற்றிக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். (அ)

## சாயிபாபாவின் 55வது பிறந்த தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமிதியினர் இம்மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியிலுள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி மண்டபத்தில் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 55வது பிறந்த தினவிழா கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் தியானம். இலட்சார்ச்சனை மகேஸ்வர பூசை, பஜனை, பாலர் நிகழ்ச்சி, பேச்சு ஆகியன இடம்பெறும்.


## பிராமண பூசகர் தேவை

எட்டியாந்தோட்டை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலுக்கு ஓர் பிராமண பூசகர் தேவை. எல்லா வசதிகளும் உண்டு. விபரங்களுக்கு:
ரஞ்சனுஸ், 17, 18, 18A, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். 7391

## வாடகைக்கு / குத்தகைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 2 படுக்கை அறைகளுடன் கூடிய நவீன வீடு, மின்சாரம், தண்ணீர், வசதிகளுடன் தனி வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல. 7380,
C/o ஈழநாடு லிமிட்,
யாழ்ப்பாணம்.
7380

## பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் பாவித்த பொருட்களை விற்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

செம்பு வயர் ஸ்றிப்ஸ் ஏறக்குறைய 1 M/T
செம்பு கேபிள் ஏறக்குறைய 1 M/T

கேள்வி விண்ணப்பகாரர்கள் மேற்குறிப்பிட்ட பொருட்களுக்கான விலைகளை தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விகள் தபால் மூலம் கூட்டுத்தாபன பரந்தன் அலுவலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அங்கு காணப்படும் கேள்விப்பெட்டியில் போடப்பட வேண்டும்:

கேள்விகள் உள்ளடக்கிய தபாலுறையில்
"செம்பு வயர் ஸ்றிப்ஸ், கேபிள் ஆகியவற்றுக்கான கேள்வி"
எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். மாதிரிக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. பொருட்களை தொழிற்சாலையில் பார்வையிடலாம்.

கேள்வி முடிவுத்திகதி 26-11-80 காலை 10 மணி.

விநியோக முகாமையாளர்,
பரந்தன் இரசாயன பொருட்கள் கூட்டுத்தாபனம்,
பரந்தன். (7382)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் - ஈராக் யுத்தம் தொடர்கிறது; இருதரப்பிலும் பெருமளவு ஆள்,படைச்சேதம்!

லண்டன், நவ. 18

ஈரான்—ஈராக் துருப்புக்களுக்கிடையே தொடர்ந்து கடும் யுத்தம் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் முக்கிய நகரம் ஒன்றைக் கைப்பற்றுவதற்காக ஈராக்துருப்புக்கள் ஈரான் துருப்புக்களுடன் கடும் யுத்தத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது

இவ்யுத்தத்தின்போது பெருமளவு ஆட்சேதமும், படைச்சேதமும் ஏற்பட்டதாக இருநாடுகளும் தெரிவித்துள்ளன.

ஈரானின் இம் முக்கிய நகரைப் பிடிப்பதற்காக 5,000 ஆட்படையுடனும், நூற்றுக்கணக்கான டாங்கிகளுடன் புகுந்துள்ளதாக ஈராக்கியர்கள் கூறுகின்றார்கள்.

அதேவேளை ஈராக்கியத் துருப்புக்களை விரட்டியடித்துவிட்டதாக ஈரானியர்கள் கூறுகிறார்கள். இந் நகரம் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும் ஈரான் அறிவித்துள்ளது. ஈராக்கியத்துருப்புக்களை 14 கிலோ மீட்டர் தூரம் பின்னோக்கி விரட்டியடித்துள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

'டெஸ்பன்' நகரைச் சுற்றி ஈரான்—ஈராக் துருப்புக்களுக்கிடையே கடும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக தெஹ்ரான் வானொலி அறிவித்துள்ளது. (வெ)

## அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் திருத்தம்

புதுடில்லி, நவ. 18

அத்தியாவசியப் பொருட்களில் கொள்ளைலாபமடிப்பவர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதற்காக அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தில் திருத்தமொன்றைக் கொண்டுவரப்போவதாக மத்தியஅரசு அறிவித்துள்ளது. (வெ)

## சவூதிஅரேபியா எண்ணெவழங்கும்

புதுடில்லி, நவ. 18

ஈராக்—ஈரான யுத்தத்தால் இந்தியாவிற்கு ஏற்பட்ட எண்ணெய் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக சவூதி அரேபியா இந்தியாவிற்கு பெருமளவில் எண்ணெயை வழங்க முன்வந்துள்ளது.

இதுகுறித்து சவூதிஅரேபியாவின்எண்ணெய்த்துறைஅமைச்சர் ஜனுப் ஷேக் ஜமானியுடன் இந்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (வெ)

## அசாமில் மின்சாரநெருக்கடி
### மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்படுகின்றன

கௌகாத்தி, நவ. 18

கௌகாத்தியிலுள்ள எண்ணெ சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டுள்ளதையடுத்தும், அகில இந்திய நிறுவனம் நிலவாயு விநியோகம் செய்வதனை நிறுத்தியுள்ளதினாலும் அசாமில் மின்சாரப் பற்றாக்குறை அபாயம் ஏற்படலாமெனக் கூறப்படுகிறது.

அகில இந்திய நிறுவனம் அசாம் மாநிலத்திற்கு நிலவாயு விநியோகம் செய்வதை நிறுத்திவிட்டதைத் தொடர்ந்து சுமார் 111 மெகவாட் மின்சாரத்தைஉற்பத்திசெய்துகொண்டிருந்தஅசாம் மின்சார சபையின் ஜாம்மு அனல் மின்சார நிலையத்தின் மின் உற்பத்தி ஏற்கனவே நிறுத்தப்பட்டுவிட்டதாக மாநிலஅரசின் செய்தியொன்று கூறுகின்றது.

கௌகாத்தி எண்ணெச்சுத்திகரிப்பு ஆலை இயங்காதுள்ளதால் அசாம் மின்சாரசபையின் 30-மெகவாட் மின்சர உற்பத்தித் திறன் கொண்ட சந்திரப்பூர் அனல்மின்சார நிலையத்தையும் மூடிவிடவேண்டிய நிலைமை ஏற்படலாமென்றும் கூறப்படுகிறது. இதன் காரணமாக அசாம் மாநிலத்தில் இன்னும் ஒருசில தினங்களில் மின்உற்பத்தி பெருமளவில் குறைந்துவிடுமென தெரிவிக்கப்படுகிறது. (வெ)

## அரிசி வரி ரத்து

காட்மெண்ட், நவ. 18

இந்தியாவின்அரிசி ஏற்றுமதி மீது விதித்திருந்த வரியை நேபாள அரசாங்கம் ரத்துச் செய்துள்ளது.

முன்பு நேபாள அரசாங்கம் இந்தியாவிற்கு ஏற்றுமதிசெய்யும் அரிசியின் மீது 20 சதவிகிதவரி விதித்திருந்தது. (வெ)

## "இன்றைய இளைஞர்களிடம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிலவவேண்டும்"

(மன்னார்)

"இன்றைய இளைஞர்களிடம் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்திருக்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து செயலாற்றவேண்டும்".

இவ்வாறு எருக்கலம்பிட்டி அரசினர் மத்தியமகாவித்தியாலய அதிபர் ஜனாப் எம். கே. எச். முகம்மது தலைமையில் நடைபெற்ற வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். சரீபு கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில்,

"மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்கள் எவ்வளவு !அக்கறை காட்டுகிறார்களோ, அதேபோல் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், நல்லொழுக்க வளர்ச்சிக்கும், பெற்றோர்களும் பொதுநலன் விரும்பிகளும் நடந்துகொள்ள வேண்டும். ஒரு பிள்ளையை கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் சிறப்பாக இருக்கச்செய்தலே நாம் இவ்வுலகில் விட்டுச் செல்லும் பெரிய செல்வமாகும்.

"இந்த வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்றாக இணைந்து செயல்பட்டுவருவதையிட்டுநான்பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஜனாப் எம்.கே. எச். முகம்மது (அதிபர்), துணைத்தலைவர்கள்: ஜனாப் எம். சி. அமானுல்லா ஜே.பி., ஜனாப் எஸ். ஏ. கபூர். ஜனாப் எம். சர்புத்தீன், ஜனாப் எம். என், ஐயூபு (சட்டத்தரணி), செயலாளர்; ஜனாப் எஸ். கே. கே. றகுமத்துல்லா, துணைத் செயலாளர்கள்: ஜனாப் எம். ஜீ. அமானுல்லா. ஜனாப் எஸ். பி. ஜபருல்லா, பொருளாளர்; ஜனாப். ஏ. ஜலால்தீன் (ஆசிரியர்). (ஈ)

## எட்டுஎண்ணின் யோகமும் தாக்கமும் பற்றி ஆய்வு

(யாழ்ப்பாணம்)

"எட்டு எண்ணில் பிறந்தோரும், எட்டு எண்ணில் ஆங்கிலத்தில் பெயரமைத்தோரும், தமிழில் எட்டு எழுத்துககளில் பெயரமைத்தோரும், குறுக்கு வழிகளில் குபேரர்களாகி இவ்வுலகை போகங்களை அனுபவிப்பதற்குச் சட்டத்திற்கும் மனநீதிக்கும் விரோதமான குறுக்கு வழிகளையே கையாள முயலுகிறார்கள், மோசடி; கள்ள மார்க்கட்; கடத்தல்; நம்பிக்கைத் துரோகம் சூதாட்டம் ஆகியன இவர்களது மனதை இலகுவாகக் கவருகின்றன

இவ்வாறு இலங்கை சோதிட ஆய்வுமன்றம், நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடாத்திய ஆய்வு நிகழ்ச்சிகளில் "எட்டு எண்ணின் யோகமும் அதன் தாக்கமும்" என்ற கட்டுரையை சமர்ப்பித்த எண் சோதிடர் திரு. எல். எல். செல்வநாதன் தெரிவித்தார். சோதிடர்கள் கலந்துகொண்ட இந்தஆய்வு நிகழ்ச்சிக்கு,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா, சுப்பிரமணிய ஐயர் தலைமைதாங்கினார்.

திரு. செல்வநாதன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது" ராகு என்ற அசுரன் தேவஸ்தானத்தை அடைவதற்கு முயன்று தேவர்போன்று கபடமாக நடித்து அமுதத்தை பெற்று உண்டதற்குத் தண்டனையாக விஷ்ணுவின் சக்கரத்தினால், துண்டிக்கப்பட்டதாகவும் அவை தேவஸ்தானத்தையடைந்து ராகு கேதுக்களாக சுற்றுகின்றதாகவும் கூறப்படுகிலது. சோதிடம் அறிந்தோர் சனிக்கிரகமானது பல நிகழ்ச்சிகளை இயக்குவதற்கு ராகுவைப் பயன்படுத்துவதால் ராகுவானது சனியின் உதவிக்கிரகமாக இயங்குவதை அறிவர், இதனாலேயே எட்டு எண்ணை சனிக்கிரகம் ஆளுகின்றதென்ற மயக்கநிலையும் பலருக்கு ஏற்படுகின்றது. ஆனால் இவ்வெண் ஆதிககம் செலுத்தும் மனிதர்களையும் பொருட்களையும் இடங்களையும் நுணுகி ஆராய்வதால், இம்மயககநிலையில் தெளிவு ஏற்படுகின்றது. தேவஸ்தானத்தை அடைவதற்கு குறுக்கு வழியைக் கைக்கொண்ட அசுரனின் குறுக்கு வழியை ஒத்தவாறே, எட்டு எண்ணால் ஆளப்படும் மனிதருடைய குணாதிசயங்களும் இருக்கின்றன என்றார்.

கைரேகை ஜோதிடர் திரு. த. பாக்கியராஜா சமர்ப்பித்த "ஐக்கிய ரேகைகளை மட்டும் வைத்து திருமணவிடயங்களை கூறககூடாது" என்ற கட்டுரையும் ஆராயப்பட்டது. (ஈ)

## புலோலியில் திறந்தசந்தை ஆரம்பிக்கப்படும்

(புலோலி)

புலோலிப்பகுதி உற்பத்தியாளர்களினதும். பாவனையாளர்களினதும் நன்மைகருதி புலோலிக்கிராமக் கோட்டடியில் 'திறந்த சந்தை' ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத்திறந்த சந்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளைப் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தலைவர் திரு. கே. வி. செல்வராசன் மேற்கொண்டுள்ளார்.

புலோலிக் கிராமாட்சி மன்றத்திற்குச் சொந்தமான புலோலிக்கிராமக்கோட்டுமண்டபத்திலேயே இத் திறந்த சந்தை ஆரம்பிக்கப்படவுள்ளது. இம் மண்டபத்தைத் திறந்து சந்தையாகப் பாவிப்பதற்குப் புலோலி கிராமாட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. கெங்காதரன் அனுமதி வழங்கியுள்ளாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ். றோட்டறிக் கழக வருடாந்த சேவைவாரம்

(அரியாலை)

யாழ். றோட்டரிக் கழகத்தின் வருடாந்த சேவை வாரத்தையொட்டி அதன் அங்கத்துவ கழகங்களான யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரி இன்ரறக் கழகம் கல்லூரி வளவிலும், வீதிகளிலும் மரங்களை நாட்டினர். யாழ்.சென்ற் ஜோன்ஸ் கல்லூரி இன்ரறக் கழகம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் வைத்தியப் பிரிவுகளைக் காட்டும் இலக்கப் பலகைகளைச்சீர்திருத்தி அமைத்தனர்.

வாரத்தில் இறுதிநாளன்று யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் பரியோவான் கல்லூரி இன்ரறக் கழகத்தாரின் 'ஆச்சி சுட்ட வடை' என்னும் நாடகம் முதலாம் இடத்தைப்பெற்றது. புனித சம்பத்தரிசியார் கல்லூரி இன்ரறக் கழகம் காத்தாளம்மிக்க நாடகத்திற்கான பரிசிலைப்பெற்றுக்கொண்டது!

'மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா?' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் 'ஈடுபடலாம்' என்ற விவாதத்தில்கலந்துகொண்ட யாழ். பரி. யோவான் கல்லூரி இன்ரறக் கழகக் குழு சிறந்த விவாதக் குழுவாகவும். அக்குழுவின் தலைவர் செல்வன் சஞ்சயன் சிறந்த விவாதிப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஈ)

## அலுமாரியிலிருந்த தாலிக்கொடி மர்மமாக மறைவு

(யாழ்ப்பாணம்

அலுமாரிக்குள் வைத்துப் பூட்டப்பட்ட தாலிக்கொடி ஒன்று மர்மமாகமறைந்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

மேற்படி திருட்டுச் சம்பந்தமாக முதலாம் ஒழுங்கை ரெம்பிள் வீதியைச் சேர்ந்த திருமதி ஸ்ரீதேவகடாட்சம்யாழ் பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது;

சம்பவதினம் மாலை நான் ஆலயத்திக்குச் சென்று கடவுளைத் தரிசித்துவிட்டு இரவு வீட்டிற்கு வந்தேன். இரவு சாப்பாடு முடித்து படுக்கைக்குச் செல்லுமுன் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான எனது தாலிக்கொடியைக் கழுத்திலிருந்து கழற்றி அலுமாரிக்குள் வைத்துவிட்டு நித்திரைசெய்தேன்.

விடிந்ததும் எனது வேலைகளை முடித்துவிட்டுத் தாலிக்கொடியை எடுப்பதற்காக அலுமாரியைத் திறந்தேன். முதல்நாள் இரவு நான் அலுமாரிக்குள் வைத்த தாலிக்கொடியைக் காணவில்லை. அலுமாரி திறந்ததற்கான அடையாளமும் காணப்படவில்லை.

யாழ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் மேற்படி மர்மத்திருட்டு சம்பந்தமாக புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (கொ)

## அனுமதிபெறுமல் மரம் ஏற்றினாம்
### டிராக்டரும் சாரதியும் பிணையில்

(புலோலி)

அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் பாலைக் குற்றிகளைக் கடத்திவந்த டிராக்டர் சாரதியைக் கைது செய்த பொலிசார், பாலைக் குற்றிகளையும் உழவுஇயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

உழவு இயந்திரத்தில் அனுமதிப்பத்திரமின்றி பாலைக் குற்றிகளை ஏற்றிவந்த திருஞானசம்பந்தமூர்த்தி புவனேந்திரம் என்ற உழவுஇயந்திரச்சாரதியே பருத்தித்துறை நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. எஸ். சுப்பிரமணியம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினார்.

இதனையடுத்து பருத்தித்துறை சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் பி. எம். நூல் அவரைப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தார்.

நீதவான் சந்தேகநபரான உழவுயந்திரச்சாரதியை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து உழவுயந்திரத்தை 50,000 ரூபா பிணையிலும், உழவு இயந்திரப் பெட்டியை 25,000 ரூபா பிணையிலும் கொண்டுசெல்ல உத்தரவிட்டு வழக்கு விசாரணையை இம்மாதம் 17ம்திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

## திருட்டு

(சுழிபுரம்)

சுழிபுரம் திருவடிநிலை தமிழ் கலவன் பாடசாலையில் கூரை ஓடுபிரித்து உள்ளே இறங்கிய கள்வர்கள் பிள்ளைகளுக்கு வழங்க இருந்த பிஸ்கட்டுகளையும் மண்வெட்டி ஒன்றையும் களவாடிச் சென்றுள்ளனர். அத்துடன் பாடசாலைக் கட்டிடத்தை அசுத்தம் செய்தும் சென்றுள்ளனர். இதுபற்றி பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர் (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உன்து நெஞ்சிற்குத் துரோகம் செய்யாதே. மனச்சாட்சியின்படி நட நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

# பணவீக்கத்தைத்தடுக்க ரூபாவின் பெறுமதிகுறைப்பைநிறுத்தவேண்டும்

— சி. பொன்னையா —

(சட்டத்தரணி)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நிதிக்கொள்கையினால் இந்நாட்டின் சாதாரண மக்கள் வாழ்க்கை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த அபிப்பிராயம் இந்நாட்டின் எப்பகுதியிலும் நிலவுகிறது.

ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டமையினால் உணவுப் பொருட்களின் விலைகள் அளவு கடந்து உயர்ந்துள்ளன. இதைச் சமாளிப்பதற்குத் தொழிலாளரின் சம்பளம் உயர்த்தப்படவில்லை. குடும்ப வாழ்க்கை சிதைந்துள்ளது. ஆயிரம் ரூபா ஊதியம் எடுத்த குடும்பம் இன்று சுமார் இரண்டாயிரம் ரூபா செலவு செய்யவேண்டியுள்ளது. ஆனால் அந்த ஆயிரம் ரூபா ஊதியம் இருந்தபடியேயுள்ளது! இந்த இடை வித்தியாசத்தை அரசாங்கமும் தனியார்துறைகளும் நிவர்த்திபண்ணவில்லையென்பதுதான் மக்கள் கவலை. இதனால் மக்களின் வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

சில நாட்களுக்கு முன்புதான் அரசு ஊழியர்களுக்குச் சம்பளத்துடன் ரூபா 70 சேர்த்துக் கொடுப்பதென்று கூறியுள்ளது. இது மக்களுக்குத் திருப்தியளிப்பதாகவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு அரசாங்க ஊழியர் ரூபா 300 சம்பள உயர்வு கோரி, அரசு அதற்கு இசையாதபோது, வேலைநிறுத்தம் செய்தனர். அரசாங்கம் அதை அரசியல் சம்பந்தமானது என்று சொல்லித் தட்டிக்கழித்து முறியடித்தது. ஆனால் உண்மையில் இது நியாயமான கோரிக்கையே. ரூபா 800 சம்பளம் எடுத்த ஊழியர் இன்று சுமார் 1500 ரூபாவுக்குச் செலவு செய்ய வேண்டியுள்ளது.

வேலைநிறுத்தத்தை முறியடித்திட்டோமென்று அரசினர் பெருமைப்படமுடியாது. ஏனென்றால் எத்தனையோ அரசாங்கக் காரியாலயங்களில் இன்றும்தான் வேலை முன்னைய நிலைக்குத் திரும்பவில்லை. நாம் அதைநேரில் காணக்கூடியதாகவிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி அரசு சுமார் ஒரு லட்சம் ஊழியர்களை வேலைநீக்கம் செய்திருக்கிறது போலத் தெரிகிறது. இந்த ஒரு லட்சம் ஊழியர்கள் எத்தனையோ லட்சம் வாக்குகளை உடையவர்கள்! விரைவில் அவர்கள் ஆட்சியையே மாற்றக்கூடியதாகவிருக்கும்.

## என்.எம். பெரேராவின் படுதோல்வி

முந்திய அரசாங்கத்தில் நடந்தது என்ன. நிதிமந்திரியாயிருந்த டாக்டர் என்.எம். பெரேராதான் வேலைநிறுத்தத்தை முறியடித்துவிட்டதாகப் பெருமைப்பட்டார். தேர்தல் வந்தது; ஊழியர்கள் ஒருங்கிணைந்து அவருக்கு மாறாக வேலைசெய்தனர். படுதோல்வியடைந்தார் டாக்டர் பெரேரா! இன்றும் சுதந்திரக் கட்சியின் படுதோல்விக்கு டாக்டர் பெரேராவே காரணம் என்கின்றனர். இன்றைய ஆட்சியிலும் ஊழியர்கள் கடுமையான மனத்தாங்கல் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

செல்வந்தராகவுள்ள ஆட்சியாளருக்கு ஏழைகளின் கஷ்டங்கள் புலப்படாது. இன்று ஒரு தொழிலாளி 10, 11 பேர் உள்ள தனது குடும்பத்துக்குக் குறைந்தது ஐந்து றாத்தல் பாண் வாங்கவேண்டியுள்ளது. அதற்கு ஒரு கறி தயார்பண்ணவேண்டும். நாட்கூலியாக 15 அல்லது 20 ரூபா எடுக்கும் தொழிலாளி இந்த ஒரு உணவிலேயே முக்கால்வாசிச் சம்பளத்தைச் செலவு செய்யவேண்டியுள்ளது மற்ற நேர உணவுகளுக்கு அவன் என்ன செய்வது? ஒவ்வொரு நாளுமே வேலை கிடையாது. பாவம் இந்தப் பணவீக்க காலத்தில் அவன் என்ன பாடு படுகிறான். குடும்பமே பட்டினிபிருக்க நேர்ந்துள்ளது.

முன்பு ஒன்று அல்லது 2 துண்டு பாணை ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுக்கக்கூடியதாகவிருந்தது. இன்று ஒரு துண்டுகூடக் கொடுக்கமுடியாமலிருக்கிறது. இன்று அந்தோ! தருமத்துக்கே இடமில்லாமலிருக்கிறது!

## உணவுப்பொருள் விலை அன்றும் இன்றும்

ஒரு றாத்தல் பாண் முன்பு 82 சதம். இன்று ரூபா 2-05 சதம். அரிசி முன்பு ரூயா 3. இன்று ரூபா 7-50. கோதுமை முன்பு 85 சதம்; இன்று ரூபா 2-25 சதம். பட்டர் முன்பு ரூபா 6, இன்று ரூபா 18. தேங்காய் முன்பு 90 சதம், இன்று 2 ரூபாவுக்குமேல். தேயிலை முன்பு ரூபா 6-00! இன்று ரூபா 10-00. ஒரு போத்தல் பால் முன்பு ரூபா 1-00; இன்று ரூபா .2-25சதம். ஒரு தோடம்பழம் முன்பு ரூபா 1-00: இன்று ரூபா 3/-க்கு மேல். இப்படியாக எல்லாமே விலை ஏறியுள்ளது. இப்படியிருந்தும் ஊழியரின் சம்பளம் இருந்தபடியே இருக்கிறது. இதுதான் மனவேதனையைத் தருகிறது. பணவீக்கம் இருக்கும்போது அரசுதொழில் முதலாளிகள் ஊழியர்களுக்குப் போதியளவு ஈடுசெய்ய வேண்டும். அதிகரித்த விலைகளின் சுமார் 80 % பங்கை இவர்கள் ஊழியர்களுக்கு வழங்கவேண்டுமென்று உலகப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள், இலங்கையில் இந்த நிவாணத்துக்கு இடமளிக்கப்படவில்லை.

## கட்டிடப்பொருட்கள்

ரூபா 10-50 விற்ற சிமெந்து இன்று 70 ..... 80 ரூபாவாக விற்கிறது. மரத்தின் விலையும் ஏறிவிட்டது. மற்றும் கட்டிடச் சமான்களும் அசாதாரண மானவிலையில் விற்கப்படுகின்றன! கொட்டில்வீடு போட எண்ணிய தொழிலாளியும் அதை கைவிட்டுவிட்டான். வீட்டுச் செலவுக்கே தட்டுப்பாடு. ஒருநாளுக்குக் குறைந்த பட்சம் ஒரு தொழிலாளியின் வீட்டுக்கு 50 ரூபா தேவைப்படுகிறது. ஆனால் அவனின் கூலியோ குறைவு. இன்று நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது குடும்பமாகவே தற்கொலைசெய்துகொள்கிறார்கள். அவர்கள் விட்டுச்செல்லும் எழுத்துக்களே பட்டினியால் நஞ்சு மருந்து அருந்தி இறக்கின்றார்களென்று சான்று பகருகின்றன!

வறுமையும் பிணியும் தாண்டவமாடுகின்றபோது அதர்மம் தலைதூக்குகிறது: கொள்ளையும் கொலையும் அதிகரிக்கிறது. இந்த நிலையை மாற்றுவதெப்படி? பொருளாதார அமைப்பு மாறவேண்டும்: சமுதாய சீர்திருத்தமும் ஏற்படுத்தப்படவேண்டும்.

## ரூபா மதிப்பை மீண்டும் உயர்த்தவேண்டும்

முதலில் எமது ரூபாவின் பெறுமதியை மீளவும் உயர்த்த வேண்டும். வெளிநாட்டார் இங்கு முதலீடுசெய்வதை ஊக்குவிப்பதற்காக எமது ரூபாவின் நாணயத்தை குறைப்பது விரும்பத்தக்க நிதிக்கொள்கையாகாது. அத்தகைய முதலீடு நாட்டுக்கு ஒரு சிறு நன்மையளித்தபோதும், எமதுமக்கள் தமது வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கை செய்து மனத்திருப்தியும் சந்தோஷமும் அடைவதேபெரிதும்விரும்பத்தக்கது. வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கும்போது சாதாரணமக்கள் தமது வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களை வாங்கும் தகைமையை அரசுகணித்துக்கொள்ளவேண்டும்.

## மலேசியாவிலும் இந்தியாவிலும் இலங்கையிலும்

இலங்கையில் ஆயிரம் ரூபா அல்லது ஆயிரத்தைந்நூறு ரூபா சம்பளம் எடுப்பவரிலும் பார்க்க மலேசியாவில் எண்ணூறுவெள்ளிசம்பளம் எடுப்பவரும் இந்தியாவில் ஆயிரம் ரூபா எடுப்பவரும் பன்மடங்கு திருப்திகரமாகவும் சந்தோஷமாகவும் வாழ்கின்றனர் மலேசியாவில் ஒரு கட்டி (1 1/3 றாத்தல்) சீனி 75 சதம்; இந்தியாவில் ஒரு கில்லோ (2 றாத். 2 அவுன்ஸ்) ரூபா 6-30 சதம். மலேசியாவில் அரிசி ஒரு கட்டி 65 சதம். இந்தியாவில் ஒரு கில்லோ ரூபா 4-50 சதம். மலேசியாவில் ஒரு போத்தல் பால் 30 சதம். இந்தியவில் ஒரு லிற்றர் (1 1/4 போத்தல்) பால் ரூபா 2-20 சதம், மலேசியாவில் ஒரு சட்டி பருப்பு 1 வெள்ளி 40 சதம். இந்தியாவில் ஒரு கில்லோ பருப்பு ரூபா 4.50 சதம். மலேசியாவில் ஒரு முட்டை 16 சதம். இந்தியாவில் 50 சதம். மலேசியாவில் ஒரு தோடம்பழம் 20 சதம். இந்தியாவில் 50 சதம். மலேசியாவில் ஒரு தேங்காய் 50 சதம். ஒரு சட்டி கோப்பி 3 வெள்ளி 50 சதம். இவ்விதமாக அநேகமாக எல்லாப் பொருள்களும் மலிவாகவிற்கப்படுகின்றன.

இந்தியாவில் நல்ல தரமான ஒரு சாப்பாடு 3 ரூபா 50 சதம், மலிவுச் சாப்பாடு 1 ரூபா 50 சதம். இந்த மலிவுச் சாப்பாடு இங்கு நாம் 5 ரூபாவுக்கு வாங்கும் சாப்பாட்டிலும் பார்க்கத் தரமானது. சிங்கப்பூரில் வாழும் பிரஜைகளின் வாழ்க்கை இன்னும் மேலானது. மலேசியாவில் வெள்ளி நாணயம் சுமார் ஒன்பது ரூபாவைக்கொண்டது என்று அதிகாரிகள் சொல்லக்கூடும். அப்படியானால் மலேசியாவில் 1000 வெள்ளி சம்பளத்துக்கு இங்கு சுமார் 9000 ரூபா சம்பளம் இலங்கை அரசு கொடுக்கவேண்டும், பொருட்களின் விலைகளை அரசு நிர்ணயிக்கும்போது பிரஜையின்

(5-ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கு

## விரல் வீக்கம்

பகிரங்கக் கூட்டம் ஒன்றில் பிரதம பேச்சாளரை அறிமுகப்படுத்தும் பண்பு தனித்துவமானது. பெரியார் ஒருவரை சபைத்தலைவர் வானளாவிப் புகழ்ந்துவிட்டு தமது அறிமுக உரையை முடித்தபின் பேச்சாளர் எழுந்து அறிமுகப் படுத்தப்பட்ட பெரியார் வேறொருவராக விருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்தாராம்,

''சென்ற மூன்றாண்டு காலமானது பொருளாதார நாசத்திலிருந்துபொருளாதார மீட்சிக்கு மாறும் காலகட்டமாகத் திகழ்ந்தது. இக்குறுகிய காலத்தில் நாம் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியும் வளர்ச்சியும் அடைந்துள்ளோம். இன்று முழுநாடும் சுறுசுறுப்போடு செயற்படுகிறது. நாட்டின் நிதி வளங்கள் மட்டுமன்றி மனிதவளமும் பொருள்வளமும் கட்டுமட்டானவை. நாம் விரலுக்கு அதிகம்வீங்குவதைப்பற்றி எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்று தமது பட்ஜட் உரையில் இவ்வாறு குறிப்பிட்டுப் பேசியவர் நிதி, அமைப்புத் திட்ட அமைச்சர் திரு. ரொனி டி மெல் அவர்கள்.

வாசகர்கள் எந்த நாட்டைக் குறிப்பிடுகின்றார் என்று சந்தேகப்பட்டால் அதில் எவ்வித வியப்புமில்லை. எமது நாடாகிய இலங்கையைத்தான் சுட்டுகிறாரா? ஆம். விரலுக்கு அதிகம் வீக்கமாகாதென்ற புத்திமதி கூறுகிறாரல்லவா?

நிதியமைச்சரின் இன்றைய அச்சம், நாட்டில் அளவு கடந்த வளர்ச்சியேற்பட்டால் அதில்அபாயமுண்டென்பதே!' விரலுக்குத் தக்கவீக்கமென்பது' முதுமொழி. எனவே இன்று நாட்டில் காணப்படும் சுறுசுறுப்பைக்கண்டு இவ்வித அச்சம் அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

நாம் பண வீக்கத்தால் தாக்குண்டு செய்வதென்னவென்றுதெரியாது தத்தளிக்கும்போது அமைச்சர் விரல் வீக்கம் பற்றிப் பேசுகிறாரே என்று அதிசயிக்க வேண்டியிருக்கிறது.

நிதியமைச்சரைப் பொறுத்தளவில் பல அதிசயங்கள் எமது நினைவுக்கு வருகின்றன. ஒன்று கடந்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கம் முன் எப்பொழுதுமில்லாத அளவில் வெளிநாட்டுவளங்களைத் திரட்டியுள்ளது. கிடைத்த வெளிநாட்டு உதவி எந்தவளர்முகநாட்டிற்கும்கிடைக்கக்கூடிய உச்ச அளவு உதவியாகும். சென்ற மூன்று ஆண்டுகளில் அடைந்த பயன்கள் கணிசமானவை. இவ்வாறு நாட்டின் இன்றைய முன்னேற்றத்தை வர்ணித்த நிதி அமைச்சர் அளவு கடந்த வளர்ச்சிகளால் இன்னல்கள் தோன்றுமென்று அஞ்சுவது நியாயமானது.

நாட்டுமக்கள் இதனை எவ்வாறு நோக்குவர் என்பதை நாம் கணிக்கக் கடமைப்பட்டுள்ளோம். எதிர்க்கட்சியினர் என்ன தான் சொன்னாலும் நாட்டில் ஒருவித சுறுசுறுப்பு ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தாராள பொருளாதாரக் கொள்கையினால் பணப்புழக்கம், இறக்குமதிகடை நிரம்ப பாவனைப் பொருட்கள், முதலிய ஆரவார வாழ்வு அதிகரித்துள்ளது.

பெரும் அபிவிருத்தித்திட்டங்கள், அவை உதவும் வேலைவாய்ப்பு இவை போன்ற ஆக்கவேலைகள் பணவீக்கத்தை ஏற்படுத்தி அதன் விளைவாக விரல் வீக்கம் ஏற்படுமென்பது நிதியமைச்சரின் வாதம்.

சாதாரண மக்கள் இதனையே வேறுவிதமாகக் கருதுவது வெளிப்படை. ஒருபானை சோற்றுக்கு ஒரு அவிழே பதம். எனவே அவர்கள் காணும் சுறுசுறுப்புக் காட்சிகள் என்ன? என்றும் நீடித்துக்கொண்டு போகும் பஸ் வரிசைகள், நாளுக்கு நாள் மரக்கறி, மீன் விலைஏற்றம், ரெயில் வண்டிகளில் பிரயாணிகள் இருக்க இடமில்லாமல் நின்றுகொண்டு பிரயாணம் செய்தல், அடிக்கடி தடம்புரளும் புகைவண்டிகள், அடிக்கடி வேலைநிறுத்தம் செய்யும் மின்வெளிச்சங்கள் அதேசமயம், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் சுறுசுறுப்புக் கொண்ட பணக்கார வர்க்கத்தினர், புதுப்புது மோட்டார் வண்டிகளில் சவாரி செய்யும் கறுப்புச்சந்தைக்காரர், புதுப் பணம் படைத்த பெரியவர்கள்— இவ்வித இருதலைப்பட்ட காட்சிகளே ஏழை மனிதனுக்குப் புலப்படும்.

''இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஒருபோதும் கண்டிராத பேராபத்துக்களை உலக சமுதாயம் 1990ம் ஆண்டில் எதிர்நோக்குகிறது'' என்று பணவீக்கமும் பின்னடைவும் நிலவுகின்ற காலகட்டத்தில் பிராண்ட் (Brandt) ஆணைக்குழு எச்சரிக்கைவிட்டுள்ளது. இதனை தம் உரையில் குறிப்பிட்ட நிதியமைச்சர் இது எவ்வளவு தூரம் எங்கள் நாட்டைப் பொறுத்தளவில் உண்மை என்பதை விளக்கத் தவறிவிட்டார்.

இந்த ஏற்றத்தாழ்வு மக்களிடையே வளர்ந்துவரும் இக்கால கட்டத்தில் வளர்ச்சியின் பேறுகள் எவை சாதாரண மனிதனை சென்றடைந்திருக்கின்றன? இந்த அவலநிலையில் வாழும் மத்தியதர, ஏழை மக்களைக் கொண்டு ஒரு சனநாயக சோசலிச சமுதாயத்தை எவ்வாறு கட்டியெழுப்பலாம்? மண்ணுங்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டை பணியாரம் என்பார்கள்.

கட்டவும் எழுப்பவும் வேண்டாம் மக்களை வாழவிடுங்கள் என்ற குரல் ... பதுபோல் தெரிகிறது

# மக்கள் கருத்து

## கேணியடி ஒழுங்கையின் கேட்பாரற்ற நிலை

'வானம் கறுத்துவிட்டால் கும்மிருட்டு. வானம் தூவிவிட்டால் பெருவெள்ளம். வெய்யில் எறித்துவிட்டால் சேற்று நாற்றம். இத்தனைக்கும் மத்தியிலே கேணியடி ஒழுங்கையில் வாழும் மனித ஜீவன்கள் உலாவுகின்றன. அடியபாதவீதி தொடக்கத்தில் இருந்து புறப்படும் கேணியடி ஒழுங்கைக்கு வந்து பார்ப்பவர்கள் கேணியடிஒழுங்கையின் கேட்பாரற்ற நிலையைக் கண்டுகொள்ளலாம். இரண்டுமுழ வெள்ளத்தில் சறுக்கிவிழுந்து சர்க்கஸ் விளையாடும் பாதசாரிகள் பலர். கும்மிருட்டில் முட்டிமோதி காயப்படுபவர் பலர். சேற்றிலிருந்து எழும் நோய்க்கிருமிகளால் தாக்குண்டவர் பலர். இருப்பினும் இதுவரை கொக்குவில் கிராமசபை இந்த அவலநிலையை அகற்ற எதுவுமே செய்ததில்லை. இனியாவது கேணியடி மக்கள் மனக்குறை மறையுமா? அல்லது செவிடன் காதில் ஊதிய சங்காகுமா?

[illegible],
கொக்குவில்-மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சக்தியை வீண்விரயம் செய்யாது சிக்கனமாகப்பயன்படுத்தவேண்டும்"

## யாழ். பிரதம கல்வியதிகாரி உரை

(புலோலி)

"இன்றைய விஞ்ஞான உலகிலே சக்தியின் செயற்பாடு மக்களின் வாழ்க்கையோடு ஒன்றியுள்ளது எனவே சக்தி வளம் அருகும்போது அப்பிரச்னை உலகமக்களை பெரும் பிரச்னைக் குட்படுத்துகின்றது. தற்போது இந்நிலை ஏற்பட்டுள்ளதால் சக்தியைப் பெறுவதற்கான மாற்று வளங்களைக் கண்டு பிடிப்பதிலும் சக்தியை வீண்விரயம்செய்யாது சிக்கனமாகப் பயன் படுத்துவதிலும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது மிக முக்கியமாகும்".

இவ்வாறு தொண்டமனாறு விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலையத்தில் "சக்திவளத்தை பெறுவதற்கான மாற்றுவழிகள்,' சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆறு நாள் பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். பிரதம கல்வியதிகாரி திரு கே. நவரத்தினம் குறிப்பிட்டார். இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பத்து விஞ்ஞான ஆசிரியர்களும், பதினேழு விஞ்ஞான உயர் வகுப்பு மாணவர்களும் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டு சக்திவளத்தைப் பெறுவதற்கான ஆய்வுகளையும் செயல் முறைப் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். பிரதம கல்வியதிகாரி திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

மீளப்பெறமுடியாத சக்தி வளங்களான பெற்ரோலியம், நிலக்கரி ஆகியனவற்றின் வளம் குன்றிவருவதால் நீண்ட காலத்திற்கு நாம் அவற்றை நம்பியிருக்காமல் மீளச்சக்தியைப் பெறக்கூடிய வளங்களான சூரியஒளி, வளி, காடு, உயிரினக்கழிவுப் பொருட்கள் ஆகியனவற்றிலிருந்து சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கானவழிகளைத்தேடிக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

எம்நாட்டில் தேவையான சக்தியின் 90 வீதத்தை மக்கள் விறகிலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். இது மீளப் பெறக்கூடிய சக்தி வளமாக இருந்தபோதிலும் திட்டமிட்டு இவ்வளம் பேணப்படாதபடியால் இவ்வளத்தையும் நாம் நீண்ட காலத்திற்கு நம்பியிருக்க முடியாதுள்ளது, இலங்கை மக்கள் பெற்ரோலிய எரிபொருட்களுக்குப் பதிலாக காடு, உயிரினக்கழிவுப் பொருட்கள் ஆகியவளங்களிலிருந்து சக்தியைப் பெறுவதற்கான மாற்று வழிகளையும் ஆராய்ச்சிகளையும் மிகத்துரிதமாக மேற்கொண்டு வந்தாலேயே எதிர் காலத்தில் எமக்குத் தேவையான சக்தியைப் பெற்றுக்கொள்ள இலகுவாக இருக்கும்.

இலங்கையிலே இயற்கையாகவுள்ள நீர்வளத்திலிருந்து ஓரளவுக்கு மின்சக்தியைப் பெறக்கூடியதாக இருக்கின்றபோதிலும் எப்பொழுதும் பெறக்கூடிய சூரியஒளி, வளி, உயிரினங்களின் கழிவுகள் ஆகியனவற்றைப் பயன்படுத்தி எமது நாட்டின் சக்தித் தேவையை நீண்டகாலத்திற்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாற்றுச் சக்தி வளங்களைப் பெற முயற்சிக்கும் நாம் சக்தி வீண்விரயத்தைத் தடுப்பதற்கும் சக்திப் பாவனைச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பாக தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலையம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தொழில் நுட்ப வல்லுனர்களையும் ஈடுபடுத்தி இப்பிரச்சினை தொடர்பாக ஆய்வுகளையும் செயன்முறைத் திட்டங்களையும் இப்பாசறையில் மேற்கொண்டு மக்கள் மத்தியில் இப்பிரச்னை தொடர்பாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருவது பாராட்டப்படவேண்டியதாகும்.

இது போலப் பல சமூகப் பிரச்சனைகள், சூழல் மாசடைதல், மாற்றுணவுத்திட்டம், நாட்டின் தேசிய ஒற்றுமை போன்ற விடயங்களிலும் பாசறைகளை அமைத்து ஆராய்வுகளை மேற்கொண்டுள்ள இந்நிலையம் இதுபோன்ற ஆராய்ச்சிகளை மேற்கொண்டு மக்களின் வாழ்க்கைத்தரவசதிகளையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் மேம்படுத்த வேண்டும் எனறார்.

# மன்னார் மூதாட்டி கொலை: இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மன்னார் எருக்கலம் பிட்டியில் நடைபெற்ற 80 வயது மூதாட்டியைக் கொலை செய்து சுமார் 9 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை கொள்ளையடித்தது சம்பந்தமாக இருவரை யாழ்ப்பாணப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இம்மாதம் முற்பகுதியில் மன்னார் எருக்கலம் பிட்டியிலுள்ள வீடொன்றில் வசித்து வந்த முகம்மது பீ பீ என்ற மூதாட்டியின் வீடொன்றிற்குள் இம்மாத ஆரம்பகுதியில் புகுந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று அவ்வீட்டில் வைத்து மேற்படி மூதாட்டியைத் திருகிக் கொலை செய்து விட்டு அவருக்குச் சொந்தமான சுமார் 9 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த தங்கநகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி கொலை கொள்ளை ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேதிக்கப்படுபவர்கள் கொள்ளைப் பொருட்களுடன் பஸ் மூலம் மன்னாரிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வந்து இறங்கி அங்கிருந்து வாடகைக்கார் ஒன்றை அமர்த்தி அக்காரில் கஸ்தூரியார் வீதிக்குச் சென்று அங்குள்ள நகைக்கடை ஒன்றில் கொள்ளைப் பொருட்களை விற்பனை செய்தனராம்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை வாங்கியதாக சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் கொழும் புத்துறையைச் சேர்ந்த எம். மர்மத்துரை என்பவரையும் நகைகளை விற்பனை செய்வதற்கு காரை ஓட்டியதாக அராலியைச் சேர்ந்த எஸ். சின்னராசா என்பவரையும் யாழ். உதவி பொலிஸ் அதிபர் ஜனுப் நிசாம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர்கைது செய்துள்ளனர்.

மூதாட்டி கொலை கொள்ளை சம்பந்தமாகப் புலன் விசாரணையில் ஈடுபட்ட மன்னார்ப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் பொன்ராசா என்பவரைக்கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணைக்குட்படுத்தப் பட்டபோது கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப் பட்டதாகக் கூறப்படும் எட்டுச் சோடி தோடுகளை யாழ் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (கொ)

# கிராமங்கள் அபிவிருத்தியடைய

## அபிவிருத்திச்சங்கங்களின் செயற்பாடு முக்கியம்

### உதவி அரசாங்க அதிபர் உரை

(மட்டுவில்)

கிராமங்கள் அபிவிருத்தியடைந்து நிலை உயர்வதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகளே முதுகெலும்பாக அமைந்துள்ளன. சங்கநிர்வாக உறுப்பினர் நேர்மைக்கும் மக்களின் நம்பிக்கைக்கும் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா மிருசுவில் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் தொடர்ந்து கூறியதாவது

இப்பகுதி கிராம மக்களின் அன்புக்கு இலக்காக உள்ள இச்சங்கத்தின் உறுப்பினர்கள் இக்கிராமத்தின் மூலவளங்களான தென்னம் பொருட்களைக் கொண்டு கயிறு துடைப்பம் கயிற்றுப்பாய் போன்ற சிறுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதின் மூலம் இக்கிராம மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் வெற்றி காணமுடியும் என்றார்.

மிருசுவில் கிராம சேவையாளர் திரு. இரத்தினசிங்கம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. குணரத்தினம் திரு. ஜீவரத்தினம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (வெ)

# கந்தபுராணப் படிப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் கந்தபுராணப்படிப்பு ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து மூன்று மாதங்கள் படிப்பு நடைபெறவிருக்கிறது சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசு உரை கூறி வருகின்றார்.

## வழக்கம்பரையில்

வழக்கம்பரை அம்மன் கோவிலில் காசிகாண்டப் புராணப்படிப்பு இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து முப்பது நாட்கள் படிப்பு நடைபெற்று பூர்த்தியாகும். தினமும் பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல்வரை படிப்பு நடைபெறுகிறது. திரு. எஸ். சண்முகநாதன் பயன் கூறி வருகின்றார். ஒவ்வொரு திங்கட்கிழமையும் விசேட அர்ச்சனைகள் நடைபெறுகின்றன. (ச)

# 3 பெண்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர்

(நெல்லியடி)

பழைய பகைமை காரணமாக வீட்டிலிருந்த பெண்கள் மூவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியிலுள்ள அல்வாய் வடக்கில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இராசம்மா, மங்களேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளவராவர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் பொல்லு, கத்தி என்பன உபயோகிக்கப் பட்டுள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இத் தாக்குதல் சம்பந்தமாகப்பருத்தித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. [illegible] விசாரணை நடத்தி வருகின்றார். (அ)

# "மயிலியதனைக் கிராமம் புறக்கணிக்கப்படவில்லை"

## — வல்வை நகரமுதல்வர்

(நெல்லியடி)

'வல்வெட்டி நகரசபைப் பிரதேசத்திலுள்ள மயிலதனை வட்டாரம் எந்தவொரு காலத்திலும் புறக்கணிக்கப்படவில்லை. மற்றைய வட்டாரங்களிலும் பார்க்க இவ்வட்டாரத்தில் அபிவிருத்தி வேலைகள் திகமாக நடைபெற்றுள்ளன' என்று வல்வை நகரமுதல்வர் திரு. ச. ஞானமூர்த்தி தெரிவித்தார். மயிலதனை வட்டார மக்கள் தம்மை நகரசபையினின்று பிரித்துவிடுமாறுகோரி வருவதும், இதுசம்பந்தப்பட்ட பிரச்னைகளை வைத்து த. வி. கூட்டணியிலிருந்து சிலர் ராஜினாமச்செய்ய முன்வந்துள்ளமை பற்றியும் நமது நிருபர் அவருடன் தொடர்புகொண்ட போதே மேற்கண்டவாறு திரு. ச. ஞானமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இம்மயிலதனை வட்டாரத்தில் கடந்த 15 மாத காலத்தினுள் ரூபா 40 ஆயிரம் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுள்ளன. த. வி. கூட்டணி நிர்வாகம் நகரசபையினைப் பொறுப்பேற்பதற்கு முன்புள்ள இரண்டு வருடங்களில் 77/78) இவ்வட்டாரத்தில் சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான அபிவிருத்திவேலைகளே நடைபெற்றுள்ளன.

நகரசபையின் உத்தேச வரி மதிப்பீடு 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவாகும். மயிலதனை வட்டாரத்தைப் பொறுத்தவரை மதிப்பீடு 25 ஆயிரம் ரூபாவாகும். வரி 25 ஆயிரமாக இருக்கின்றபோது வரி நிலுவை சுமார் 35 ஆயிரமாக இருக்கின்றபோதிலும் 40 ஆயிரத்துக்கு அபிவிருத்திவேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வட்டாரத்தினைப் புறக்கணிக்கும் செயலாகுமா?

கிராமசபையினுள் இருந்த பகுதியானபடியால் இவ்வட்டாரத்தில் குறைந்த அளவு வரியை அறவிட நாம் முயற்சிகள் எடுத்துவருகிறோம். இது சம்பந்தமாக திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்புகளை ஆரம்பித்துள்ளோம். இது இவ்வாறிருக்க இவ்வட்டாரத்தின் நகரசபை உறுப்பினரே தமது வட்டாரத்தில் கூடுதலான வேலைகள் நடைபெற்றிருப்பதனைத் தீர்மானமொன்றின்படி உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்விபரங்களை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், த. வி. கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம், பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு கே. துரைரத்தினம் ஆகியோருக்கும் கடிதமூலம் அனுப்பிவைத்துள்ளனர். (அ)

# பணவீக்க...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகக்குறைந்த சம்பளத்தையும் பொருட்களின் உற்பத்திச் செலவையும் கணித்துக் கொள்ளவேண்டும்.

பஸ், புகையிரதப் பிரயாணக் கட்டணங்கள் அளவு மீறி உயர்த்தப்பட்டிருப்பது மக்களின் துன்பத்தைக் கூடுதலாக அதிகரித்துள்ளது. பஸ், புகையிரதக் கட்டணங்கள் முறையே 50%. 60% உயர்த்தப்படுமென்று இலங்கை வானொலிமூலமாக அறிவிக்கப்பட்டது. இப்போது அறவிடப்படும் கட்டணங்களைப் பார்க்கும்போது 100%க்கு கொஞ்சம் குறைவாகத்தான் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த 8-ம் திகதி சனிக்கிழமை ஒருவர் சுமார் எட்டுமைல் தூரத்துக்கு பஸ் பிரயாணம்செய்தார். முன்பிருந்த கட்டணம் ரூபா 1-10 சதம். ஆனால் அன்று அவரிடமிருந்து அதேயிடத்துக்கு 2 ரூபா அறவிடப்பட்டது. தற்போது சுமார் இரண்டு மைலுக்குப் போக ரூபா 1-20 சதம் அறவிடப்படுகிறது. இதனாலே பஸ், புகையிரதப் பிரயாணம் குறைந்துவிட்டது; வியாபாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. 10% அல்லது 15% கட்டண உயர்வுதான் வருமென்று மக்கள் எண்ணியிருந்தனர். ஆனால் கட்டணங்களை அறிந்ததும் மலராடிப்புப்பட்டவர்கள் போல் காட்சியளிக்கின்றனர்! வெகுவிரைவில் இக்கட்டணங்கள் குறைக்கப்படவேண்டும். இது பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளது. எந்த அதிகாரி என்ன விளக்கத்தைக் கொடுத்தாலும் மக்களின் துன்பம் தணியப்போவதில்லை.

பணவீக்கம் என்றுமில்லாத வகையில் உச்சக்கட்டம் அடைந்துள்ளது. இதைக் கட்டுப்படுத்தாதுபோனால் என்றோ ஒரு நாளைக்கு வெடிக்கப் போகிறது. பணவீக்கத்தைக் குறைப்பதற்கு ரூபாவின் பெறுமதியை முன்னைய நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்று இந்நாட்டின் எப்பகுதியிலும் அபிப்பிராயம் நிலவுகிறது. நிரந்தரமான பொருளாதார அமைப்பை நாம் நிறுவவேண்டும். அத்துடன் மக்கள் தமது உணவுப் பொருட்களைத் தமது உழைப்புக்கு அமைய வாங்கும் தகைமையான உன்னத கோட்பாட்டை அரசு அனுசரித்தல்வேண்டும்.

எமது நாடு தன்னிறைவு அடைவதற்கு எங்கள் தொழில் துறைகளைப் பெருக்கி சகலருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும். 'தன் கையே தனக்குத் துணை' என்ற கோட்பாட்டை மேற்கொண்டு உள்நாட்டு மூல சக்திகள் யாவற்றையும் விருத்திசெய்தல் அவசியம். வெளிநாட்டார் முதலீடுசெய்து வர்த்தகத்தைப் பெருக்குவது இரண்டாம் இடத்தையுடையதே.

இன்றைய பணவீக்கம் பெரும்பாலும் எமது ரூபாவின் பெறுமதியைக் குறைத்ததாலேயே எழுந்தது. எனவே ரூபாவின் பெறுமதிக் குறைப்பை உடனடியாக அகற்றவேண்டும். இதனால் பொருட்களின் விலைகள் குறையும், மக்கள் தமது வாழ்க்கையைச் செவ்வனே நடாத்தக்கூடும். நல்லதோர் வரவு-செலவுத்திட்டமானது தொழிலாளியின் ஆகக்குறைந்த சம்பளத்தை அடிப்படையாக வைத்தே கணிப்பது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்கு யுவதிபலி!

(பண்டத்தரிப்பு)

அதிகாலை நேரத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளிவரச் சென்ற 18 வயது யுவதி ஒருவர் தவறி கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார். சங்கானை சிலம்புப்புளியடியைச் சேர்ந்த தம்புசாமி செல்வராணி என்னும் 18 வயது இளம் பெண்ணே இவ்வாறு கிணற்றிற்கு பலியானவராவார். இவரின் மரணவிசாரணை பண்டத்தரிப்பு பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அத்தனாசியார் முன்னிலையில் நடைபெற்ற போது காலம் சென்றவரின் தந்தையான வைரமுத்து தம்பு சாமி சாட்சியமளிக்கையில், தமது மகள் அதிகாலை 5 மணியளவில் தேநீர் தயாரிப்பதற்கு தண்ணீர் அள்ள கிணற்றடிக்கு சென்றார் என்றும் சிறிதுநேரத்தில் ஏதோ சத்தம் கேட்கவே தாங்கள் ஓடிச்சென்று பார்த்த போது நீரில் கிடந்து தத்தளித்ததாகவும் அயலவரின் உதவியுடன் வெளியேஅவரைத் தூக்கியபோது உயிர் பிரிந்து விட்டதாகவும் தெரிவித்தார். அயல் வீட்டுக்காரரான செல்வரட்னம் என்பவரும் சாட்சியமளித்தார் விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி நீரில் மூழ்கியதினால்ஏற்பட்டவிபத்து மரணம் என்றும் தீர்ப்பு வழங்கினார் சாட்சிகளை சங்கானை பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு.ஏ செனிவரத்தின ஆஜர் செய்தார். (ஈ)

## "உப அஞ்சல் அதிபர்களுக்கு அரசு ஓய்வூதியம்வழங்கவேண்டும்"

### 'அமிர்' கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

"உப அஞ்சல்'அதிபர்களின் பிரச்னைகளைக் கடந்த 15 வருடத்திற்கு மேலாக பாராளுமன்றத்தில் பேசி வருகிறேன். தொடர்ந்தும் பேசுவேன்."

இவ்வாறு ஸ்ரீலங்கா உப அஞ்சல் அதிபர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றும்போது கூறினார்.

சங்கத் தலைவர் திரு. அ. கோபாலரத்தினம் தலைமையில் நடைபெற்ற இச்கூட்டத்தில்; எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: "உபஅஞ்சல் அதிபர்கள் கிராமப்புறங்களில் அளப்பரிய சேவை செய்து வருகின்றனர். அவர்களை முழு நேர அரச ஊழியர்களாகக் கருதி அவர்களு கு ஓய்வூதியம் வழங்க அரசு வழி செய்ய வேண்டும். தென்னிலங்கையிலுள்ள சங்கங்களுடன் ஒன்று சேர்ந்து உங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரைத்தயாரித்து என்னிடம் கையளித்தால் வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் இது பற்றிப் பேசுவேன்" என்றார்.

கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசும்போது கூறியதாவது; நான் அஞ்சல் தொலைத் தொடர்பு திணைக்களக் குழுவில் இருப்பதினால், நீங்கள் தயாரித்துத் தரும் மகஜரை அமைச்சர் விஜயதுங்காவிடம் சமர்ப்பித்து உங்கள் கஷ்டங்களைத் தீர்க்க ஆவன செய்வேன்."

கடந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையே அடுத்த பொதுக் கூட்டம் வரை தொடர்ந்து பதவி வகிக்க வேண்டுமென ஏகமனதாக இங்கு தீர்மானிக்கப்பட்டது. (வெ)

## ஆசிரியர் பற்றுக்குறை நீங்கும்

(மட்டக்களப்பு)

புதிதாக வழங்கப்படவுள்ள ஆசிரியர் நியமனங்கள் யாவும் வழங்கப்பட்டவுடன் படுவான் கரைப்பகுதி பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர்கள் பற்றுக் குறை தீர்ந்துவிடும்.

இவ்வாறு மட்டுநகர் முதல் வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை தெரிவித்தார்.

## கல்முனையில் பரிசளிப்பு விழா

(கல்முனை)

கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி பரிசளிப்பு விழா. நேற்று செவ்வாய்க்கிழமை பிரதம கல்வி அல்காரி ஜனாப் எஸ். எம். ஜஷெரிப் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக பரிசுத்த பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி வண. நிக்கோலா றொட்டுனோ கலந்து கொண்டார். (உ)

## கிராமசபை நிர்வாகஸ்தர்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை நிர்வாகஸ்தராக யாழ் செயலக உதவி நிர்வாக அதிகாரி திரு. எஸ். அரசு இம்மாதம் 6-ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். சென்ற மூன்று மாதங்களுக்கு மேலாக விசேட ஆணையாளர் ஒருவர் இக் கிராமசபைக்கு நியமிக்கப்படாததால் மின்சார வேலைகள் பல தாமதமடைந்துள்ளன. புதிய நிர்வாகஸ்தரை பொதுமக்கள் ஒவ்வொரு புதன், சனி நாட்களில் சந்திக்கலாம்.

## போயாவன்று அறவழிக் குழுவின் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாடு ஏற்படவும், ஆலய முகாமையாளர்களின் மனக்கதவுகள் திறக்கவும், மக்கள் மத்தியில் மனமாற்றம் சிந்தனைத் தெளிவு ஏற்படவும், தமிழ் இன ஒற்றுமை மலரவும் அறவழிப் போராட்டக் குழு நடாத்தும் பிரார்த்தனை தந்தை செல்வா நினைவாலய முன்றலில் எதிர்வரும் போயா தினமான வெள்ளிக்கிழமை காலை தொடங்கி மாலை 6மணி வரை நடைபெறவிருக்கிறது.

இப்பிரார்த்தனையின் முடிவில் சாதி, சீதனப்பேய்களின் கொடும்பாவிகள் எரிக்கப்படவிருக்கின்றது. (ஈ)

## பளை நோயாளர் கஷ்டம்

(பளை)

பளை அரசினர் வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்,மற்றும் விடுமுறை நாட்களிலும் மருந்து எடுக்கச் செல்லும் நோயாளர்கள் மிகுந்த சிரமம் அடைவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. அங்கு நிரந்தரவாகக் கடமையாற்றும் மருந்துகலவையாளரை விடுமுறைத்தினங்களில் கடமையாற்றுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் அனுமதி வழங்காதிருப்பதாகவும்இந்நாங்களில் போதிய பயிற்சியற்ற தொழிலாளர்களே மருந்து வகைகளை விநியோசித்து வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. இதனால் நோயாளர்கள் டாக்டர் எழுதிய தமது மருந்து வகைகளைப் பெறுக்கொள்வதில் பெரும் சிரமம் அடைந்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.இது பற்றி சுகாதார சேவை அத்தியட்சகரின் கவனத்திற்குச் கொண்டுவரப் பட்டுள்ளது. (பண்-நி)

## "அரசாங்க உதவியின்றி கூட்டணி தனித்துநின்று எதனையும்சாதிக்கமுடியாது"

### --யாழ். மாவட்ட அமைச்சர்

(பச்சிலைப்பள்ளி)

"இன்றைய ஜெயவர்த்தன அரசாங்கம் நாட்டிலுள்ள சகல தேர்தல் தொகுதிகளையும் ஒரே கண்கொண்டே நோக்குகிறது. தமிழர் வாழும் தேர்தல் தொகுதிகளுக்கும்,சிங்களவர் வாழ்கின்ற தேர்தல் தொகுதிகளுக்கும் அபிவிருத்திக்காக ஒரேயளவு நிதியே ஒதுக்கப்படுகிறது"

இவ்வாறு யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் ஆழியவளையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசுகையில் கூறினார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ். மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோனும். பருத்தித்துறைத் தொகுதி ஐ. தே. கட்சி அமைப்பாளர் திரு. வ. சந்திரசேகரமும் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்கள். யாழ் மாவட்ட அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழர் விடுதலைக் கூட்டணியினரை நீங்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்து அனுப்பினாலும் அவர்கள் அரசாங்கத்தின் உதவியில்லாமல் தனித்து எதனையும் சாதிக்கமுடியாது. நீங்கள் ஐக்கியதேசியக்கட்சியில் சேர்ந்து, ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரைப்பாராளுமன்றம் அனுப்புவதின் மூலம் உங்கள்,தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்ய முடியும்.

"தற்போது இங்கு அமைக்கப்பட்டு வரும் இருபது வீடுகளைவிட மேலும் இருபது வீடுகள் அமைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன். உங்கள் தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றிவைப்பேன்" என்று கூறினார்.

மற்றும் பருத்தித்துறை ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர் திரு. வ. சந்திரசேகரம், திரு. ச. வெற்றிவேலு, திரு. சு. புத்திரசிகாமணி, திரு. மோசேஸ், திரு. திரவியராசா ஆகியோரும் உரையாற்றினர். கிராமத்தின் தேவைகள் பற்றிய மகஜர் ஒன்றும் மாவட்ட அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.





புதுமையான போனஸ் திட்டம் உள்ள ஒரு சேமிப்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி சேமிப்போருக்கு ஒரு கவர்ச்சியான அம்சத்தை அளிக்கின்றது.

சேமிப்பு கணக்கு வழங்குவது வருடத்திற்கு 10% வட்டி

கணக்கிலிருந்து ஒருவருடம் பணத்தை மீளாதிருந்தால் வருடத்திற்கு மேலதிகமாக 5% வட்டி ஆகவே வருடத்திற்கு 15% வட்டி வழங்கப்படும்.

உங்களால் இயன்ற பொழுது சேமியுங்கள். ஒழுங்காக பணம் கட்ட வேண்டும் என்ற நியதி கிடையாது.

எம்முடன் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள், மேலதிக விசேஷ சேவைகளை அளிப்பதில் தனிப் பெருமை பெற்றவர்கள். எமது தலைமைக் காரியாலயத்தில் அல்லது எமது கிளை அலுவலகங்களில் முழுவிபரமும் அறிந்து கொள்ளலாம்.

கொள்ளுப்பிட்டி - 26174 கொட்டாஞ்சேனை - 23471
கண்டி - 08 - 3163 அல்லது 08 - 3217
யாழ்ப்பாணம் - 276 காலி - 09 - 2377
கலேவெல்ல - 95 மாத்தளை - 0662 - 485
வெள்ளவத்தை - 86097 மாத்தறை - 041 - 2819

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
மாவத்தை கொழும்பு 1.
தொலைபேசி - 28193/5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**Bugsy Malone**

**வின்ஸர்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)

வெற்றி முழக்கமிடும் 7-வது வாரம்
**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
**மீனவ நண்பன்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்திரா
அசோகன்
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

கடைசி 2 தினங்கள்
**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

**சாந்தி** இன்று மட்டும்
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
**மூன்று முடிச்சு** புதிய பிரதி
—கே. பாலசந்தர்
கமல் - ஸ்ரீதேவி - ரஜனி - ஒய். விஜயா
20-11-80 THE WILBY CONSPIRACY


# சென். ஹென்றீஸ் வெற்றி

(பலாலி)

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரியுடன் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி 9-2 என்ற கோல்களால் தோற்கடிக்கப் பட்டது.

சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சீ. எஸ். அருள்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# உதைபந்தாட்டப் போட்டி

(பலாலி)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 1-ம் பிரிவில் உரும்பிராய் இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் கல்லூரியும் கலந்துகொண்ட போட்டியில் ஒவ்வொரு கோஷ்டியும் தலா 3 கோல்களைப் போட்டதினல் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் வைத்திஸ்வராக் கல்லூரியும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம ம. வித்தியாலயமும் கலந்துகொண்ட மற்றுமொரு போட்டியில் வைத்தீஸ்வராக் கல்லூரி 5-1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது. மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திரு. சீ. எஸ். அருள்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


**ஹரன்** யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKEY AND THE BANDIT
action-comedy-color

**நாகம்ஸ்** (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
அவள் ஒரு ஜீவநதி

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)


# "விளையாட்டுக்கள் மூலம் உடல் உறுதியைப் பேணவேண்டும்"

## நீதிபதி மகேசன் உரை

(புலோலி நிருபர்)

"நவீன நாகரீக வசதிகளினல் தற்காலத்தில் மக்களின் உடல் உறுப்புக்களுக்கு வேலைகள் குறைவாக இருப்பதனல் உடல் இயக்க சக்தி குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக இயக்க வல்லமைகள் குறைவடைந்து மக்கள் இளம் வயதிலேயே நோய்களுக்காளாகி முதுமையடைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே நாம் விளையாட்டுக்களில் ஈடுபட்டு எமது உடல் உறுதியைப் பேணிக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக்கழகத்தின் 32வது ஆண்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் குறிப்பிட்டார். டாக்டர் தேவராசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய நீதவான் கூறியதாவது:

இன்றைய விஞ்ஞான யுகத்திலே நாகரீக வசதிகள் அதிகரித்து வருவதனல் மனிதன் இயற்கையோடு எதிர்த்துப் போராட வேண்டிய நிலைகுறைவடைந்து வருகின்றது. எனினும் நாம் முன்னைய வாழ்க்கை முறைகளையும் மரபுகளையும் பேணிக்காக்க வேண்டும்.

எமது முன்னோர்களின் வாழ்க்கையோடு இணைந்து அவர்களுடைய அன்றாட நடவடிக்கைகளாக விளங்கிய செயல்களையே நாம் இன்று விளையாட்டுக்களாகக் கருதுகின்றோம். இவ்விளையாட்டு நடவடிக்கைகளே அவர்களது வாழ்க்கையை வளம்படுத்தி அவர்களைச் சிறந்த அறிவாளிகளாக்கியும் வந்தன.

இன்றைய - விளையாட்டுக்களில் கயிறு இழுத்தல், தடைதாண்டி ஓட்டம், அஞ்சலோட்டம் போன்றன முக்கிய இடத்தினை வகிக்கின்றன. ஆனல் முற்காலங்களில் கரைதட்ட மறுக்கும் கப்பல்களைக் கயிறுகட்டி இழுத்து நிறுத்துவதற்கு கயிறு இழுத்தலும் நீர்நெருப்பு போன்ற தடைகளைத்தாண்டிச் செல்வதற்கு தடைதாண்டி ஓட்டமும் மாற்ருன் படை புகுந்த செய்தியை இராசதானிக்கு அறிவிப்பதற்கு அஞ்சலோட்டமும் பயன்படுத்தப்பட்டன என்பதை நாம் அறியலாம்.

வலிமை உறைந்த உடல், உளம் கொண்ட சமுதாயத்திலேதான் சமுதாயக் குறைபாடுகள் சமூக அநீதிகள் மலிந்து காணப்படுகின்றன. உடலும் உள்ளமும் வலிமை பெற்று சமூக அநீதிகளைக் களைந்து சமூக நீதிகளை நிலைநாட்ட விளையாட்டுக்கள் வழி வகுக்கின்றன.

உடல் வலிமை பேணப்படும் போதுதான் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள அனுகூல மேற்படும். தொழில்முயற்சிகள் மேற்கொள்ளப்படாதவிடத்து எமது உடலைக் கூட கொண்டியக்க முடியாத நிர்ப்பந்தமேற்படும். உடல் உள் வலிமைகளைப் பேணுவதன் சமுதாயத்தின் தேவைகள் சிறப்பாக நிறைவேற்றப்படும் என்ருர்,

ஸ்ரீலங்கா நலன்புரிச்சங்க

# வைத்திய அதிகாரிகளின் சேவைக்கு பாராட்டு

(மன்னர்)

சிறிலங்கா நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள், கொழும்பு கண் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வைத்திய அதிகாரி திருமதி சிவயோகம் சிறீஸ்கந்தராசா தலைமையில் மன்னர் ஆஸ்பத்திரியிலுள்ள கண்நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சையளித்தனர்.

இவ்வைத்திய அதிகாரிகள் இலவச கண் சத்திரசிகிச்சை அளித்ததன் மூலம் கண் ஒளி பெற வாய்ப்புக் கிடைத்தது பெரும் வரப்பிரசாதமாகும் என்று நோயாளர் பாராட்டினர்.

இலவச கண் சத்திர சிகிச்சை பெற்ற 100 கண் நோயாளர்களுக்கும் இலவச மூக்குக் கண்ணுடிகள் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (ஈ)

# இன்பருட்டிக்கிராமத்தில் விரைவில் மீனவர் துறைமுகம்

## யாழ். மாவட்ட அமைச்சர் தகவல்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள இன்பருட்டிக் கிராமத்தில் மிகவிரைவில் மீனவர் துறைமுகம் அமைக்கப்படுமென யாழ். மாவட்ட அமைச் திரு யூ. பி. விஜயக்கோன் உறுதியளித்துள்ளார்.

பருத்தித்துறைத் தொகுதிக்கு விஜயம்செய்த மாவட்ட அமைச்சர் இன்பருட்டிக்கிராமத்திற்கும் விஜயம் செய்தார். இங்கு வருகைதந்த மாவட்ட அமைச்சருக்கு இன்பருட்டி முற்போக்கு அணித்தலைவர் திரு. சிவராசா தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது. மாவட்ட அமைச்சருடன் யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரி திரு. எஸ் பி. பாலசிங்கம், பருத்தித்துறை நகராளுமன்ற ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர் திரு. சி. வ. சந்திரசேகரம் ஆகியோரும் விஜயஞ்செய்திருந்தனர்.

இங்குவந்து மீனவர் துறைமுகத்தை அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிட்டபோதே மாவட்ட அமைச்சர் இன்பருட்டியில் மிகவிரைவில் மீனவர் துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று உறுதியளித்தார்.

# மரம் நாட்டு விழா

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் அரசாங்க கூட்டுத்தாபன இலக்காக்களிலும், சில தனியார் இடங்களிலும் பெருவாரியான மரம் நாட்டும் வைபவங்கள் கடந்த சில நாட்களாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இம் மரக்கன்றுகளை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் விநியோகித்துவருகின்றர்.

# ஆட்சேபம்

(நெல்லியடி)

கட்டைவேலி- உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்க ஊழியர்களுள் ஒரு பகுதியினரை வேலைநீக்கம் செய்வதற்கு நிர்வாகம்எடுத்துவரும் முயற்சிகளை இலங்கை பொதுசைத்தொழிலாளர் சங்கம் வன்மையாக எதிர்த்துள்ளது.

மேற்படி சங்கத்தின் கட்டைவேலி கிளைத்தலைவர் திரு.கே. பரமதாஸ் தலைமையிலானகுழு வேலை நீக்க நடவடிக்கைபற்றி உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு த இராசலிங்கத்திடம் புகார் செய்துள்ளதுடன் வேலைநீக்க நடவடிக்கையை நிறுத்துவாறும் கோரியுள்ளது. (அ)


**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு
ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ✯ சீமா ✯ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ✯ வி. கே. ராமசாமி ✯ மனோரமா
விதுபாலா ✯ ரீஞ ✯ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ✯ மார்ஷல்
மற்றும் பலர் ஜொலிக்கும்
**ஒரே வானம் ஒரே பூமி**
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கணிதப் பயிற்சி
விளக்கமும் விடைகளும்
ஆசிரியர் வி. ச. சுப்பிரமணியம்
6 ஆம் வகுப்பு மூன்றும் பதிப்பு (அச்சில்)
7 ஆம் வகுப்பு இரண்டாம் பதிப்பு 7-75
8 ஆம் வகுப்பு ,, ,, 4-75
9 ஆம் வகுப்பு ,, ,, 7-00
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்


## நிவாரணம் கிடைத்தது

(பச்சிலைப்பள்ளி)
1979 ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் பளைப் பகுதியில்பாதிப்படைந்த மக்களுக்கான வெள்ள நிவாரண நிதி தற்போது வழங்கப்பட்டுள்ளது. (அ)

## சுமங்கலி பூசை

(யாழ்ப்பாணம்)
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் சுமங்கலி பூசை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு நடைபெறும். சுமங்கலி பூசையில் கலந்துகொள்ளும்அடியார்கள் குத்துவிளக்கு, அருச்சனைத்தட்டு, பூ முதலான பொருள்களுடன் ஆலயத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## ''மீனவர் வாழ்வு உயராமைக்கு சேமிப்பின்மையே காரணம்''

(பச்சிலைப்பள்ளி)
'மீனவர்களின் வருமானம் மற்றவர்களைப் பார்க்கிலும் கூடுதலாக இருந்தபோதிலும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயராமலிருப்பதற்கு அவர்களிடையே சேமிப்புப் பழக்கம் மிகக் குறைவாகக் காணப்படுவதே காரணமாகும்'.
இவ்வாறு வெற்றிலைக்கேணியில் நடைபெற்ற பொது வைபவமொன்றில் 'கிராம மக்களிடையே சேமிப்பினை ஊக்குவித்தல்' என்னும் விஷயம்பற்றிப் பளை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. சு. லோகநாதன் பேசும்போது கூறினார்.
அவர் மேலும் பேசுகையில், 'மக்கள் வங்கி மீனவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காகப் பல்வேறுபட்ட கடன் வசதிகளையும் சேமிப்பு முறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. மீனவர்கள் எமது வருங்காலச் சந்ததியினருக்காகப் பணத்தினை வங்கியில் சேமிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். ஐந்து வயதுள்ள ஒரு பிள்ளையின் பெயரில் 1000 ரூபா, வங்கியின் சேமிப்புக் கணக்கில் போடப்படுமேயானால், அப்பிள்ளைகள் 20 வயதினை அடையும்போது வங்கி அப்பிள்ளைக்கு முதலும் வட்டியுமாக ரூபா 1 லட்சத்துக்கு மேற்பட்ட தொகையினைக் கொடுக்கும். மீனவர்கள் சேமிப்புக்கணக்கை வங்கியில் ஆரம்பிப்பதன்மூலம் வங்கியிலிருந்து கடன் வசதிகளைப் பெறக்கூடிய தகுதியையும் பெறுகிறார்கள்'. (அ)

## 120 துவாய்கள் வழங்கப்பட்டன

(மாவிட்டபுரம்)
மயிலிட்டி சயரோக வைத்தியசாலையின் நோயாளர்களுக்கு தீபாவளிப் பரிசாக வழங்கப்பட்ட 120 துவாய்களையும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் தெல்லிப்பழை பல. நோ. கூ. சங்கமும் அன்பளிப்புச் செய்திருந்தன. இரு சங்கங்களும் தலா 60 துவாய்களை அன்பளிப்பு செய்தது குறிப்பிடத் தக்கது.
வலி-வடக்கு தெற்கு சயரோக தடுப்பு அவை இத் துவாய்கள் வழங்கும் வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தது. (அ)

## குளிக்கச்சென்ற இளைஞர் சேற்றில் சிக்கி மரணம்

(புலோலி)
குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞரொருவர் சேற்றில் சிக்கித் தத்தளித்து மாண்ட சம்பவமொன்று கப்புது என்னும் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.
பொகைந்தலாவை தோட்டத்தைச் சேர்ந்த பெருமாள் நடராதன் (வயது 22) என்ற இளைஞரே சேற்றில் சிக்கித் தத்தளித்து இறந்தவராவார்.
இவரது மரண விசாரணையின்போது ஏகாம்பரம் தணிகாசலம் என்பவர் சாட்சியமளிக்கையில்: 'இறந்தவர் என்னோடு நின்று எனது தோட்ட வேலைகளுக்கு உதவிசெய்துவந்தார். பின்னர் அவர் தனது சொந்த இடத்திற்குச் சென்றுவிட்டு கடந்த மூன்று கிழமைகளுக்கு முன்னர் மீண்டும் என்னிடம் வந்து தான் விவசாயம் செய்யப்போவதாகவும், காணி தருமாறும் என்னிடம் கேட்டார். நான் எனது சமத்திற்கு உதவிசெய்துதருமாறு கேட்டேன். அதற்கு ஒத்துக்கொண்ட அவர், என்னுடன் இருந்துவந்தார். சம்பவதினம் இலந்தைசதிடல் குளத்தில் குளித்துவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்றார். பின்னர் அவர் குளிக்கும்போது சேற்றில் சிக்கி இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்' என்றார்.
செல்லம்மா என்பவர் சாட்சியமளிக்கையில், நான் நல்ல தண்ணீர் அள்ளிக்கொண்டு வந்துகொண்டிருந்தபோது குளத்தில் யாரோ சத்தமிடுவதுகேட்டு நான் உடனே அயலில் உள்ளவர்களுக்குச்சென்று அறிவித்தேன். அவர்கள் வந்து சேற்றில் சிக்குண்டு கிடந்த இளைஞனைக்கண்டு அவரை மீட்டனர். அப்போது அவர் இறந்துவிட்டார்' என்றார்.
இதனையடுத்து மரண விசாரணையை மேற்கொண்ட வடமராட்சிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு தி. வேலுப்பிள்ளை விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். சடலம் கிராமசேவை அலுவலர் திரு. சு. விஜயக்குமார் என் காணிப்பில் அடக்கம் செய்யப்பட்டது. (ஈ)


இதோ! மலிவு விலையில்
மோட்டார் உதிரிப்பாகங்கள்
MOTOR SPARE PARTS FOR SALE

ஒஸ்டின் A/50, A/55
முன் கண்ணாடி (WINDC SCREEN) 1850-00
கெட் (HEAD) 1000-00
கிறுங்சாப்ட் (CRANK SHAFT) 2000-00
ஒஸ்டின் A/40
போர் (BORE) 1400-00
மொறிஸ் மைனர் MORRIS MINOR 1000
கெட் (HEAD) 1800-00
கிறுங்க்சாப்ட் (CRANKSHAFT) 1400-00
மற்றும் உங்களுக்குத் தேவையான எந்தக் கார், லொறி, முன் கண்ணாடிகள் (Windscreens) உதிரிப் பாகங்கள் ஓடருக்கு 21 நாட்களில் இறக்குமதி செய்து கொடுக்கப்படும்.

T. ரகுநாதன்,
93/4, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், (7383) யாழ்ப்பாணம்.


## நம்பிக்கைக்குரிய நோயாளி தாலிக்கொடியுடன் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)
வயலுக்குப் போகும்போது நகையணிந்து செல்வது பாதுகாப்பில்லை என்பதற்காக தாலிக்கொடியை வீட்டில் வைத்துவிட்டு வயலுக்கு சென்ற பெண் ஒருவர் திரும்பி வந்து பார்த்தபோது தாலிக்கொடியைக் காணவில்லையாம்.
மேற்படி திருட்டுச் சம்பவம் பருத்தித்துறையிலுள்ள கப்புது என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது. இத்திருட்டுச் சம்பந்தமாக கப்புதூவைச் சேர்ந்த மகேஸ்வரி என்பவர் பருத்தித்துறைப் பொலிசில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
''சுமார் 17 ஆயிரம் ரூபா ரூபா பெறுமதிவாய்ந்ததாலிக் கொடியை அணிந்திருந்தேன். அத்தாலிக்கொடியுடன் வயலுக்குப்போனால் அபாயமேற்படுமென எண்ணித் தாலிக்கொடியை வீட்டில் வைத்துவிட்டுப்போனேன்.
சந்திரமோகன் (20 வயது) என்பவர் நடமாடமுடியாத நிலையில் வீட்டில்சுகவீனமாகப் படுத்திருந்தார், வீட்டில் அவர் படுத்திருப்பதனால் தாலிக் கொடியை யாரும் களவாடமுடியாதென்ற தைரியத்தில் தாலிக்கொடியை வீட்டில் வைத்துவிட்டு வயலுக்குச் சென்றுவிட்டேன். வயலில் இருந்து வீட்டிற்குத் திரும்பி வந்து பார்த்தபோது வீட்டில் படுத்திருந்த சந்திரமோகனைக காணவில்லை. அயலவர்களிடம் விசாரித்தேன். ஆளைக் காணவில்லை. எனக்குச்சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. வைத்த இடத்தில் தாலிக்கொடியைத் தேடினேன். அதையும் காணவில்லை''.
இத்திருட்டுச் சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (கொ-அ)

## சுதந்திரம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
ராஜ்யத்தை சங்கிலிய மன்னன் ஆண்டான். போர்க்களத்தில் தமிழ் மன்னன் உயிர்நீக்கும்போதுகூட தனது இலட்சியத்தை வெளியிட்டான். தனது எதிர்கால சந்ததி தமிழ் ராஜ்யத்தை மீளப்பெறும் என்று அவன் கனவுகண்டான்.
''சுதந்திரம் எமது பிறப்புரிமை. இதற்காக சகல தியாகங்களையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதுமாதிரியான பிரச்சினைகள் வேறு நாடுகளிலும் நிலவுகின்றன. ஆனாலும் வல்லரசுகள், இந்து மகாசமுத்திரத்திலும் நமது நாட்டிலும் தலையிட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணநாம் விரும்பவில்லை'' என்று திரு. வி என். நவரத்தினம் கூறினார்.
வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு மீது இன்று வாக்கெடுப்பு நடைபெறும். (ம)


ஹோம் பிரன்ஸ் லிமிட்.
ஹவாய் (HAWAII) டீலக்ஸ் மின்விசிறிகள்
வாடகைக் கொள்வனவில்
விநியோகிக்கப்படும்.

★ 16'' மேசை மின்விசிறிகள்
முதற்கட்டுப்பணம் ரூபா 150/-
மாதாந்தக் கட்டுப்பணம் ரூபா 95/- வீதம் 14 மாதங்கள்.

★ (f)பிளையிங் (B)பொம் (HongKong) பற்றறிகள்
மொத்த விற்பனையில் எம்மிடம் பெறலாம்
மீடியம் அளவு ஒன்று ரூ. 2-45 ச.
பென்டோச் ,, ,, ரூ. 1-40 ச.
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.

ஹோம் பிரன்ஸ் லிமிட்.,
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.


## சபையில் ஒ ீ த்தவை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
விஜயக்கோன்; திருமதிபண்டாரநாயக்காவை தமிழர்கூட்டணியினர் வடக்குக்கு அழைத்திருக்கிறார்கள்.
அமிர்: நாம் அவரை அழைக்கவில்லை.
விஜயக்கோன்: அவரை அழைத்து அங்கு காட்சிக்கு வைப்பதால் கூட்டணிக்கு எவ்வித அரசியல் லாபமும் கிட்டாது.
விஜயக்கோன்: யாழ் மாவட்டத்தில் ஏதாவது அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றால் அது ஐ தே க. காலத்தில்தான்.
சூசைதாசன்: ஒருவர் மதுபோதையில் பேசியது என் காதில் வீழ்ந்தது. அவர் சொன்னார், ''நான் 12 ரூபா உழைப்பன்; 15 ரூபாய்க்கு குடிப்பன், 10ரூபாவைப் பெண்டாட்டிக்குக் குடுப்பன், நான் சுதந்திரமனிதன், என்னை எவரும் ஒன்டும் கேட்க ஏலாது, அரசாங்கத்தின் நிலையும் இன்று இது தான்!
யோகேஸ்: வடை ஒன்றின் விலை இன்று ஒரு ரூபா.
ரெனி: வழக்கறிஞர்கள் கட்டணமும் அதிகரித்தேயிருக்கிறது.
யோகேஸ்: அது எனக்குத்தெரியாது. 77ம் ஆண்டுக்குப் பின்னர் நான் வழக்குகளுக்கு ஆஜராவதில்லை. சிலவேளைகளில் கட்சிக்காரர்களுக்கு இலவசமாகவே ஆஜராகினேன். நீங்கள் கூறுவதுபற்றி திருமலை உறுப்பினர் சில வேளைகளில் அறிந்திருக்கலாம்!
சம்பந்தன்: நானும் அதை அறியமாட்டேன்!
யோகேஸ்: நீங்கள் இன்று மக்கள் முன் சென்று 'உங்களுக்கு உணவு முத்திரை வேண்டுமா அபிவிருத்தி வேண்டுமா என்று கேட்டால் அபிவிருத்தி என்பார்கள், குறைந்த பஸ் கட்டணம் வேண்டுமா அபிவிருத்தி வேண்டுமா என்றால் அபிவிருத்தி என்பார்கள். 83ம் ஆண்டில் நாம் வீடுசெல்ல வேண்டுமா அபிவிருத்தி வேண்டுமா என்று கேட்டால், கடவுள் செயலாக நீங்கள் வீடுசென்றால் போதும் என்றுதான் அவர்கள் உங்களுக்கு கூறுவார்கள்! (ம)


விற்பனைக்கு
ஆனைக்கோட்டையில் உயரப்புலம் றோட்டு முகப்புடன் 6 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்கட்கு: 66, இந்துக்கல்லூரி ஒழுங்கை. தொலைபேசி: 7728. (7389


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... மேற்கு வீதி, 65-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No QB 8948/78 The Eelanaadu P. B. No 4. Wgrame Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org